நன்றி - நூலகத்திட்டம்


SARINIHAR

# சரிநிகர்

சரிநிகர் சமானமாக வாழ்வமிந்த நாட்டிலே - பாரதி

இதழ் 25 | 1 - 15 ஜூலை 1993 | விலை 7/=

**ராஜீவ் வைத்த பூ**



வாக்கெடுப்பும் வடகிழக்குப் பிரி[illegible]மென்று
நாக் கடுத்த கொழுப்போடு நவி[illegible]தே - [illegible]
இன்னும் இருக்கிறது; இனிய ரா[illegible]காதில்
அன்று வைத்த பூ அறி

- ஈழமோகம்

# கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பு ஒ ந ச தி

தெரிவுக் குழுவின் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு அறிவிப்போடு நாட்டை விட்டு வெளியேறிய மங்கள முனசிங்க நாடு திரும்பியுள்ளார்.

நாடி பிடித்துப் பார்ப்பதற்காக வீசப்பட்ட துருப்புச் சீட்டாக அறிவிக்கப்பட்ட வாக்கெடுப்புக் குறித்து இப்போது சிங்களக் கட்சிகளுக்குள்ளும் சந்தேகங்கள் வந்து விட்டதாகத் தெரிய வருகிறது. முஸ்லீம் மக்கள் இணைப்புக்கு எதிராகவே வாக்களிப்பார்கள் என்ற கணிப்பு எவ்வளவுக்கு நம்பிக்கையானது என்பது குறித்து சந்தேகம் 'பெருங்கட்சி' வட்டாரங்களில் எழுந்துள்ளதாகத் தெரிகிறது.

வாக்கெடுப்பை நடாத்துவதற்கான சூழல் இல்லை என்று ஏதாவது கூறி அதை ஒத்திப் போட்டால் என்ன என்ற எண்ணம் கூட எழுந்துள்ளதாகவும் தெரிய வருகிறது.

அரசாங்க சார்பு முஸ்லீம் அரசியல்வாதிகள் கூட வடக்கு கிழக்கு இணைப்பிற்கெதிராக தீவிரமாக இல்லாததும் முஸ்லீம் காங்கிரஸ் இணைப்பையே - முஸ்லீம் மக்களுக்கான அரசியலதிகாரத்துடன் கூடிய - அதற்கான உத்தரவாதத்துடன் கூடிய இணைப்பையே விரும்புவதாகத் தெரிய வந்துள்ளதும் இந்தத் தடுமாற்றத்திற்கான காரணங்களாகுமெனப் பேசப்படுகிறது.

இதனால் தான், இராணுவத்துள் பலத்த எதிர்ப்பு இருந்த போதிலும் தாம் பேச்சுவார்த்தைக்குத் தயார் என்றும் பிரபாகரனை நேரடியாகப் பேச்சுக்கு வரும்படியும் பிரதமர் ரணில் விக்கிரமசிங்க கோரியுள்ளார் என்றும் கூறப்படுகிறது.

எப்படியோ, 'சட்டி சுட்டதடா கை விட்டதடா' என்று கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு ஐடியா முடிந்த கதையாகி விட்டதென்ற கருத்து அரசியல் வட்டாரங்களில் பலமாக அடிபடுகிறது.

நாடு திரும்பிய மங்கள முனசிங்க என்ன சொல்லப் போகிறார்?

## ஐ.ஐ.தே.மு வும் இனப்பிரச்சினைத் தீர்வும்

தேசிய இனப்பிரச்சினைக்கு நிரந்தரத் தீர்வொன்றை முன் வைக்க ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணி தீர்மானித்துள்ளதாகப் பத்திரிகை செய்தியொன்று வெளியாகியுள்ளது.

அண்மையில் வெளியிடப்பட்ட அந்தக் கட்சியின் ''புதிய வேலைத் திட்டத்தினடிப்படையிலேயே இந்தத் தீர்வு தயாரிக்கப்பட்டுள்ளதாகவும், அதன் அச்சு வேலைகள் யாவும் பூர்த்தியாகி விட்டதாகவும் அந்தச் செய்தி மேலும் தெரிவித்தது.

இக் கட்சியின் தலைவர்கள் ஏற்கனவே ஐ.தே.கட்சியில் இருந்த காலத்தில் தேசிய இனப்பிரச்சினைக்கான தீர்வு ''வடமராட்சி ஒப்பறேஷனாகவும்'' ''நூலக எரிப்பாகவும்'' இருந்தது.

இந்தப் புதிய தீர்வு எப்படியிருக்கப் போகிறதோ?




## பல்கலைக் கழகங்களை தனியார் மயமாக்க உலக வங்கி கோருகிறது

பல்கலைக் கழகங்களை நிர்வகிப்பதற்கு தனியார் துறையின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்ளுமாறு உலக வங்கி அரசுக்கு ஆலோசனை வழங்கியுள்ளதாகத் தெரியவருகிறது.

புதிய பொருளாதாரக் கொள்கை, உலகப் போக்கு ஆகியவற்றைக் கருத்தில் கொண்டே தனியார் துறையின் பங்களிப்பைப் பெற்றுக் கொள்ளுமாறு உலக வங்கி ஆலோசனை வழங்கியுள்ளதாம்.

இலங்கையில் இலவசக் கல்வி வழங்கப்பட்டு வருகிறது. உலக வங்கியின் இந்தப் புதிய யோசனை இலவச உயர்கல்வி வசதியை இல்லாதொழிப்பதற்கே வழிவகுக்கும்.

உலக வங்கியைச் சேர்ந்த சில முக்கியஸ்தர்கள் இது தொடர்பாக கடந்த வருடம் மதிப்பீடொன்றை நடாத்த இலங்கை வந்தபோது துணைவேந்தர்கள், பல்கலைக் கழக மானிய ஆணைக்குழு, அமைச்சு அலுவலர்கள் ஆகியோரை சந்தித்து இது தொடர்பாகக் கலந்துரையாடியுள்ளனர்.

இது தவிர. சதொச, சீனி,சீமெந்து தொழிற்சாலைகள், மத்திய போக்குவரத்து, எஞ்சியுள்ள தேயிலைத் தோட்டங்கள் ஆகியவை பூரணமாக தனியார் மயப்படுத்தப்பட வேண்டும்.

எயர் லங்கா, மற்றும் அரச வங்கிகள் ஆகியவை தனியார் மயப்படுத்தப்பட வேண்டும்.

இலங்கைப் புகையிரதத் திணைக்களம், இலங்கை மின்சாரசபை இரண்டும் கட்டணங்களை அறவிடுவதில் உள்ள குறைபாடுகளை நீக்குவதில் கவனம் செலுத்த வேண்டும். அண்மையில் அறிவித்தபடி 30% ஆல் அதிகரிக்கப்பட வேண்டும்.




ஜனசவிய மற்றும் உணவு முத்திரைகளுக்கு ஒதுக்கப்படும் செலவுகளைக் குறைக்க வேண்டும். சத்துணவு ஆரம்பப் பாடசாலை மாணவர்களுக்கு மட்டும் வழங்கப்பட வேண்டும் எனவும் கோரியுள்ளதாகத் தெரியவருகிறது.

உலக வங்கியின் தலைவர் போல் ஐசென்மானின் தலைமையில் பாரிஸில் நடைபெற்ற உதவி வழங்கும் நாடுகளின் குழுக் கூட்டத்தில் இலங்கைக்கு 840 மில்லியன் அமெரிக்க டொலர்கள் வழங்கப்பட்டிருக்கிறது. இந்தக் கோரிக்கைகள் விடப்பட்டிருக்கின்றன.

''கடனாகத் தரும் பணத்தை மட்டுமல்ல அந்நாட்டின் பணத்தையும் எவ்வாறு செலவழிக்க வேண்டுமென்பதையும் உலக வங்கியே தீர்மானிக்கும்'' என்ற உலக வங்கியின் முன்னைய முக்கியஸ்தர்களுள் ஒருவரான டேவிட்சன் புதோவின் கூற்று இங்கு கவனிக்கப்பட வேண்டியது.

(உலக வங்கி பற்றிய கட்டுரை உள்ளே)

**அடுத்த இதழ் ஜூலை 16ல்.**

# மெல்லத் தமிழ் இனி

## ஒரு கைது

சரிநிகர் அலுவலகத்திலிருந்து வெளியே வந்தோம்.
தேனீர் அருந்துவதற்காக புறப்பட்டிருந்தோம் நாம்.
பத்திரிகைக் காரியாலயத்தில் ஆசிரியரைச் சந்தித்து பேச வென்று வந்திருந்த ஒரு வாசகர் சகிதமாக எங்களில் இவர் அலோ வீதி வழியாக காலி வீதியை நோக்கி நடந்து கொண்டிருந்தோம்.
எதிரில் மூன்று காக்கிச் சட்டை அணிந்த பொலிசார்வந்து கொண்டிருந்தனர் கைகளில் துப்பாக்கிகள் சகிதம்.
பிறகென்ன.
நாம் இடைமறிக்கப் பட்டோம்.
அடையாள அட்டைகள் பெயர்கள் முகவரிகள் விசாரிக்கப்பட்டன.
வந்திருந்த வாசகருக்கு சிங்களம் தெரியாது.
துரதிஸ்டவசமாக அவர் நீர்கொழும்பில் பிறந்திருந்ததாக அடையாள அட்டை கூறியது.
அவருக்கு சிங்களம் தெரியாததால் அவர் புலியாக அவனுக்கு தோன்றியதோ என்னமோ?
புலிகளுக்கு சிங்களம் தெரியாது என்பது அவனது கணிப்பீடு போலும்!
நாம் மூன்று ஆண்டுகளுக்கு மேலாக கொழும்பில் வசிப்பதாக சொன்ன போதும் அவன் சொன்னான் ''அப்படித்தான் இருப்பீர்கள் பிறகுதான்..!
நீர் கொழும்பு வாசகருடன் அவன் கொச்சைத்தமிழில் உரையாடினான்.
''எனக்கு தமிழ் தெரியுது உனக்கு ஏன் சிங்களம் தெரியாது? அதுதான் பிரச்சினை...!என்று எரிந்து விழுந்தான்.
எனக்கு கோபம் பொத்துக்கொண்டு வந்தது.
அவருக்கு சிங்களம் தெரியாதது அவரது தப்பில்லையே. அவர் சிங்களம் தெரிந்திருக்கவேணுமென்பது எந்த அவசியமும் கிடையாது. நீ தமிழ் தெரிந்து வைத்திருப்பதுதான அவசியம். ஏனென்றால் நீ ஒரு அரச ஊழியன்...''
என்று கூறி சண்டை பிடிக்க வாய் துடித்தது.
ஆனால் இலங்கை பொலிசுக்கு உள்ள அதிகாரங்கள் ஞாபகத்துக்கு வந்தன.
கையில் குண்டுடன் நடமாடிய ''புலியென'' என்னை நிரூபிக்க அவனுக்கு போதியளவு அதிகாரம் இருக்கிறது.
அவனால் எதையும் செய்ய முடியும்.
என் கழுத்தில் ஒரு சயனைட் குப்பியை கண்டுபிடிக்கக் கூட அவனுக்கு முடியும்.
ஏனென்றால் நான் தமிழன்.
நான் மௌனமாய் பார்த்துக் கொண்டு நின்றேன்.
வாசகரை அவர்கள் பிடித்துக் கொண்டு போனார்கள்.
எம்மால் செய்ய முடிந்ததெல்லாம் ஒன்றுதான்.
தேனீரை கைவிட்டுவிட்டு, வாசகரின் வீட்டுக்கு தகவல் அறிவித்தது மட்டும்தான்.

## இன்னொரு கைது

இது நடந்தது அதற்கு மூன்று வாரங்களின் பின்!
அதிகாலை மூன்று மூன்றரை இருக்கும்.
எனது வீட்டுக் கதவு தட்டப்பட்டது. ஆழ்ந்த உறக்கத்தில் இருந்த எனக்கு சத்தம் கேட்டு கண்விழித்த போது கதவு நீண்ட நேரமாக தட்டப்பட்டிருக்கின்றது என்பது திடீரென உறைத்தது.
கதவை திறந்த போது எதிர்பார்த்தபடியே - சிறிலங்கா பொலிஸ்!
நீண்ட நேரமாக தட்டியதில் அவனுக்கு கோபம்.
''இவ்வளவு நேரமும் என்ன செய்து கொண்டிருந்தாய்''?
அதட்டினான் அவன் - சிங்களத்தில்.
எனக்கு சிரிப்பு வந்தது.
(இப்போதெல்லாம் பயத்துக்குப்பதில் சிரிப்புதான் வருகிறது. அடிக்கடி இப்படி நடப்பதால் கூதல் விட்டுப் போய்விட்டது.)
அவனுக்கு கோபம் கூடிவிட்டது.
திரும்பவும் அதட்டினான்.
''இந்த நேரத்தில் என்ன செய்வார்கள்? தூங்கிக் கொண்டிருந்தேன் நான்'' கொஞ்சம் சூடாகவே பதில் சொன்னேன்.
''வீட்டிலே எத்தனை பேர்?
''ஐந்து பேர்...''
''வேலை..'' இப்படி வழமை போன்ற கேள்விகள்.
பொறுமையாக பதிலளித்தேன்.
தான் கொண்டு வந்த ஒரு தடிமனான புத்தகத்தின் பின்பக்கத்தில் எல்லாவற்றையும் குறித்துக் கொண்டான்.
வீட்டின் ஒவ்வொரு மூலையையும் சோதித்தான்.
3 வயது மகளின் படிக்கும் மேசையைக் கூட திறந்து பார்த்தான்.
யாராவது அதற்குள் இருக்கக் கூடும் என்று நினைத்தானோ என்னவோ.
no vistors
no
''ஏன்'' என்று கேட்பது போலிருந்தது அவன் பார்வை. அவன் திரும்பி நடந்தான். கூட இன்னும் மூவர் வந்திருக்கிறார்கள். முற்றம் வரை போய் அவர்கள் போவதைப் பார்த்துக்கொண்டு நின்றேன்.

காலையில் ஆறு மணியிருக்கும். பக்கத்து வீட்டு நண்பரின் மனைவி வந்தாள் அழுதபடி. ''எவ்வளவோ சொல்லியும் கேட்காமல் அவரைப் பிடித்துக் கொண்டு போய் விட்டாங்கள்.''
அவர் ஒரு அரச சார்பு நிறுவனத்தின் ''சேல்ஸ் எக்சிக்கியூட்டிவ்''
மூன்று மொழிகளிலும் சரளமாக பேசத் தெரிந்த அவர் ஐந்து வருடங்களாக அங்கு வேலை செய்கின்றார்.
''ஏன் நீங்கள் ஒன்றும் சொல்லேல்லையா?
'' சும்மா வா'' என்று கூட்டிப் போனார்களாம்!
பொலிஸ் நிலையத்துக்கு அவரது மனைவியுடன் போனோம்.
கைதிகளை பார்க்க முடியாது என்றான் ஒரு முரட்டு பொலிஸ்.
''அவரை எதற்காக பிடித்து வந்தீர்கள்? என்று கேட்டேன் நான்.
''தெரியாது. பெரியவர் (லொக்கு மாத்தயா) வந்த பிறகு கேள். அவர் எப்ப வருவார்?''
தெரியாது.
அன்று ஞாயிற்றுக்கிழமை.
காத்து நின்றேன்.
ஒன்பது மணிக்கு வந்தார்.
''பெரியவர் ஒருத்தரையும் பார்க்கமாட்டார். எல்லாரும் நாலு மணிக்கு வந்து பாருங்கோ'' எண்டு விரட்டினான்.
''நான் எப்படியும் உனது பெரியவரை சந்திக்க வேணும்''



என்றேன்.
''முடியாது'' கூச்சல் குடுக்க வேண்டாம்.
என்னோடு அங்கு நின்ற இன்னொருவர் எனது கையைப் பிடித்து இழுத்து வந்தார்.
'அவங்கள் சனிக்கிழமை இரவுகளிலை வந்து பிடிக்கிறது ஞாயிறுகளிலை D/Oஎடுக்காமல் நாள் முழுக்க வைச்சிருந்து எங்கடை சனத்திட்டை காசு பிடுங்கத்தான். இப்ப விட மாட்டான். பின்னேரம் வந்து பார்ப்போம்.'
எரிச்சலாக வந்தது. வெளியே வந்து சிகரெட் பிடித்தேன். இது தமிழனின் விதி. அவனது தலைவிதி. நண்பரின் மனைவியைப் பார்த்தேன். கண்ணீரில் குளித்தபடி அவள்.
அன்று பின்னேரம் அந்த நிறுவனத்தின் வியாபார முகாமையாளர்களில் ஒருவர் போய் நண்பரை மீட்டு வந்தார்.
நான் போய் அவருடன் பேசினேன்.
'அண்ணை, தமிழனுக்கு தனிநாடு வேணுமெண்டு நாங்கள் சண்டை பிடிக்கிறதிலை ஒரு பிழையும் இல்லை. நாங்கள் அப்பதான் மனிதனாய் இருக்கலாம்!'
என்றா அவர் உணர்ச்சி வசப்பட்டவராய்.

# குழந்தைப் பருவத்திற்கான பாடல்

வினைபன் பர்கூட்டி

குழந்தைப் பருவத்திற்கு மேலே
நிலவு எழுந்தது
குழந்தைப் பருவமோ நிலவொளியின் கீழ்
குருவிகளையும் பூக்களையும்
கூடைகளில் சேர்க்கும் மலைகள்
நான் குழந்தைப் பருவத்தைப் பின்தொடர்வேன்
அழுதுகொண்டும் கூரான கற்களின் மீது விழுந்தவாறும்.

அது பறிமுதல் செய்யப்பட்டுவிட்ட
குழந்தைப்பருவம்.
புத்தகங்களிலிருந்தும் எண்ணெய் ஊற்றிய விளக்குகளிலிருந்தும்
சில சமயம், சிறைச்சாலைக்குப் பயணம்
பிறகு விடுதலை, சில சமயம்.
சில சமயம், எனதுவாழ்க்கை போலியானதாகிறது
காவலர்களால் முற்றுகையிடப்பட்டுள்ள ஒரு நகரத்தில்

குழந்தைப் பருவத்திற்கு மேலே
நிலவு எழுந்தது
குழந்தைப் பருவமோ
கடலோரம் சாய்ந்து நிற்கும்
ஒரு ஊசியிலை மரம்
அந்த மரத்திற்கு மேலே, கனவுகளில்
கண்சிமிட்டும் ஒரு நட்சத்திரம்
தனது ஆயிரம் ரகசியங்களுடன்.
பனிமழையில்
அந்த மரத்தில் நான்
தூங்காமல் ஒரு இரவு முழுவதையும் கழிப்பேன்.

அது பறிமுதல் செய்யப்பட்டுவிட்ட
குழந்தைப்பருவம்
புத்தகங்களிருந்தும் எண்ணெய் ஊற்றிய விளக்குகளிருந்தும்
சிலசமயம், சிறைச்சாலைக்குப் பயணம்
பின்னர் விடுதலை, சிலசமயம்
சிலசமயம், எனது வாழ்க்கை போலியானதாகிறது
முற்றுகையிடப்பட்டுள்ள ஒரு நகரத்தில்...

# எனது மனைவியைப் பற்றிய ஓர் எளிய பாடல்

மிக்லோஷ் ராட்னோட்டி

கதவு கிறீச்சிடுகிறது
அவள் உள்ளே நுழையும் போது
பூந்தொட்டிகள் சப்புக் கொட்டுகின்றன
அவளது தலைமுடியில்
சிறிய வெண்ணிறக்கோடு கனவுத் தோற்றத்துடன்
பீதியடைந்த குருவி போலக் கீச் கீச் என்கிறது

மின்விளக்கை எரியச் செய்யும் கம்பியும் கூவுகிறது
தனது அலங்கோலமான உடல் அவள்மீது உராயும் போது
எல்லாமே சுழல்கின்றன
அதைப் பற்றி என்னால் எழுதக்கூட முடியவில்லை

நாள் முழுக்க வெளியே சென்றிருந்த அவள்
திரும்பி வந்துவிட்டாள்
அவளது கையில் பெரிய பாப்பி மலரிதழ்
அதைக்கொண்டு மரணத்தை விரட்டியடிப்பாள்.

தமிழில்..
உ. கீதா,
எஸ்.வி. ராஜதுரை

நன்றி - நூலகத்திட்டம்



# உலக பொருளாதார மந்த நிலையில் இந்தப் பணத்தைக் கொடுப்பதற்கு அவர்கள் எந்தவிதமான தயக்கமும் காட்டவில்லை - ரணில்



## "கடனாகத் தரும் பணத்தை மட்டுமல்ல அந் நாட்டின் பணத்தையும் எவ்வாறு செலவழிக்க வேண்டுமென்பதையும் உலக வங்கியே தீர்மானிக்கும்" - டேவிட்சன் புதோ

உலக வங்கியின் ஆசியப் பிராந்திய இயக்குனர் திரு போன ஐசன்மானின் தலைமையில் பாரிசில் நடைபெற்ற ''இலங்கைக்கு உதவி வழங்கும்'' நாடுகளின் கூட்டத்தில் இலங்கையின் சார்பில் தமது பரிவாரங்களுடன் பிரதமர் திரு ரணில் விக்கிரமசிங்க கலந்து கொண்டார். முன்னாள் ஜனாதிபதி பிரேமதாச அவர்களின் கொள்கைகளை (?) தொடர்ந்து கடைப்பிடிப்போம் என்று உலக வங்கிக்கு உறுதி வழங்கிய அவர், இலங்கை அரசின் ஸ்திரத் தன்மை மீதும், டி.பி. விஜயதுங்காவின் தலைமை மீதும் கொண்டுள்ள நம்பிக்கையின் காரணமாக 840 மில்லியன் அமெரிக்க டொலர்களை உலக வங்கி இலங்கைக்கு உதவியாக வழங்கியுள்ளதாக அறிவித்தும் உள்ளார். இந்தத் தொகையானது கடந்த ஆண்டு கிடைத்ததை விட 15 மில்லியன் அமெரிக்க டொலர்கள் அதிகமாகும். உதவி வழங்குதல் தொடர்பான கூட்டத்தில் பேசிய ஆசிய பிராந்திய உலக வங்கியின் இயக்குனர், இலங்கையில் குறிப்பிடத்தக்க மாற்றங்கள் ஏற்பட்டு வருவதை தான் அவதானித்துள்ளதாகவும் தெரிவித்துள்ளார்!

உலகவங்கி, இவ்வாறுதான் கடந்த ஆண்டிலும் மனித உரிமைகள் தொடர்பான இலங்கையின் நிலமைபற்றி பேசிய போதும், அதற்கு முந்திய ஆண்டை விடமேலதிகமாகவே வழங்கியது. இவ்வாறுதான் ஒவ்வொரு ஆண்டிலும் ''முன்னேற்றம் காணப்படுகிறது'', ''சமீபகால நடவடிக்கைகள் நம்பிக்கையை தருகின்றன'' போன்ற அறிவிப்புகளின் பின் இலங்கை எதிர்பார்க்கிறதிற்கும் அதிகமான தொகையைக் கொடுத்தே வந்துள்ளது.

இவ்வாறு வெளிக்கு சால்ஜாப்பு சொல்வதற்காக ஏதாவது காரணங்களை கூறிக் கொண்ட போதும், உதவி வழங்குவதில் உலக வங்கி மிகவும் அக்கறையுடன் இருக்கிறது என்பதே உண்மையாகும். மூன்றாம் உலக நாடுகளில் அபிவிருத்தப் பணிகளுக்கென்ற பெயரால் வழங்கப்படும் இந்த உதவித் தொகை, அபிவிருத்திக்கு மட்டுமே பயன்படுத்தப்பட வேண்டும் என அது கூறி வருகின்ற போதிலும் அதையிட்டு அவ்வளவாக இறுக்கமாக இருப்பதில்லை. கடந்த ஆண்டில் வழங்கப்பட்ட தொகையில் 60% மான தொகை உண்மையில் பயன்படுத்தப்படவில்லை. சுகாதாரம், கல்வி, மின்சாரம் மற்றும் நெடுஞ்சாலைகள் போன்றவற்றுக்காகவென வழங்கப்படும் இந்த உதவியில் பாதுகாப்பு அமைச்சின் செலவீனங்களுக்கும் நிதி ஒதுக்கப்படுவது சாதாரணமாகவே நடந்துள்ளது. இம்முறையும் ஒதுக்கப்பட்ட நிதியை விட 8 கோடி ரூபா மேலதிகமாக ஒதுக்கப்படவேண்டுமென அமைச்சு கோரியுள்ளது.

ஒவ்வொரு தடவையும் உதவி வழங்கப்படும் போதும் உலக வங்கி இலங்கைக்கு புதுப்புது நிபந்தனைகளை விதித்து வருகிறது. இது இலங்கையில் மட்டுமல்ல அனைத்து மூன்றாம் உலக நாடுகளிலும் அதனால் செய்யப்பட்டு வரும் ஒன்றே. தனியார் மயமாக்கல், சுகாதாரம் கல்வி என்பவற்றுக்கான மானியங்களை குறைத்தல், உள்நாட்டு உற்பத்திப் பொருட்களுக்கும் அவற்றின் மூலப்பொருட்கள் அல்லது இடுபொருட்களுக்கு வரித்தீர்வையை அதிகரித்தல், வெளிநாட்டு நிறுவனங்களுக்கு அல்லது ஏற்றுமதியை அடிப்படையாக வைத்து இயங்கும் நிறுவனங்களுக்கு வரிச்சலுகைகளை வழங்கல் என்பன இவற்றில் சிலவாகும். இதன் மூலம், உள்நாட்டின் லாபங்கள் திரும்ப உலக வங்கியின் கிளை வங்கிகளை சென்றடைய வழிவகுக்கப்படுகிறது. மக்களுக்கு உதவியாக இருப்பது போல தோற்றமளிக்கும் இந்த உதவித் தொகைகள் அனைத்தும் உலகவங்கியில் ஆதிக்கம் செலுத்தும் நாடுகளின் - குறிப்பாக அமெரிக்க வங்கிகளைப் பலப்படுத்தவும், மூன்றாம் உலக நாட்டு மக்களின் வயிற்றில் அடிக்கவுமே திட்டமிட்டு செய்யப்படுகின்றன.

கடந்த சில மாதங்களுக்குள் மின்சாரக் கட்டணம், மா, சீனி, சவர்க்காரம் போன்ற நுகர்பொருட்களின் விலை உயர்த்தப்பட்டன. இவை அரசாங்கத்தால் அறிவிக்கப்படுவதில்லை! சம்பள உயர்வை அதிகரித்த ஜனாதிபதி, அதை மீறி வரும் அளவுக்கு விலையேற்றம் ஏற்றப்பட்டுள்ளது பற்றி எதுவும் பேசுவது கிடையாது.

உலக வங்கியும், சர்வதேச நாணய நிதியமும் கைவைத்து உலகில் உருப்பட்டதாக ஒரு நாடும் இல்லை. ஆசிய, ஆபிரிக்க லத்தீன மரிக்க நாடுகளில் இவற்றுக்கான உதாரணங்கள் ஏராளம்.

உலக வங்கி வெளிப்படையாக கூறும் மனித உரிமைகள், சமாதானம், உதவி ஒழுங்காக பயன்படத்தப்படவேண்டும் என்பவைகளையே எல்லாப் பத்திரிகைகளும் முக்கியப்படுத்தி பிரசுரிக்கின்றன.

ஆனால் இரகசியமாக அது அரசின் நிதியமைச்சருக்கூடாக நாட்டுக்கு விதிக்கும் நிபந்தனைகள் ஏராளம். மூன்றாம் உலக நாடுகளின் நாணய மதிப்பிறக்கம், அந்நிய இறக்குமதிகட்கான வரிச்சலுகை, அரச அல்லது தேசிய மயமாக்கப்பட்ட தொழிற்துறைகட்கு மூடுவிழா நடாத்துதல்' அல்லது அவற்றை பல்தேசிய தனியார், கொம்பனிகட்கு குத்தகைக்கு விடச் செய்தல் என்பன நாட்டை ஒட்டச்சுரண்ட அது செய்யும் நடவடிக்கைகளாகும்.

இலங்கை பால்மா உற்பத்தி (லக்ஸ்பிறே) நிறுவனம் தனியார் மயமாக்கப்பட்டபின் கிட்டத்தட்ட 40 ரூபா அளவில் விலையேற்றப்பட்டுள்ளது. சென்ற மாதத்தில் மட்டும் ஒரு கிலோ லக்ஸ்பிறேயின் விலை 13 ரூபாவால் அதிகரித்துள்ளது. தோட்டங்களை 99 வருட குத்தகைக்கு 22 கம்பனிகளிடம் வழங்க அரசு முடிவு செய்துள்ளது. ஏற்றுமதியை மையமாகக் கொண்ட பல தொழிற்சாலைகளை வரிச்சலுகையில் அரசு உருவாக்கியுள்ளது! இவை எல்லாம் அரசு பகட்டாக அறிவிப்பது போல மக்களுக்கு உதவ அல்ல மாறாக முடிந்த மட்டும் அந்நியக் கம்பனிகள் சுரண்டிச் செல்ல அனுமதிக்கவே.

இலங்கை அரசு 1977 இல் தாராளவாதக் கொள்கையை அமுல் படுத்தியது முதல் இன்றுவரை உலக வங்கி சொன்ன இடத்தில் கைச்சாத்திட தயாராக இருந்து வந்துள்ளது. வடகிழக்கில் நடக்கும் யுத்தத்திற்கான தேவையான நிதியை இலங்கை மக்களிடம் வரிவிதித்துப் பெற்றுக்கொள்ளுமாறு உலக வங்கி நிர்ப்பந்தித்து வருகிறது. முதலில் 1% ஆக இருந்த பாதுகாப்பு வரி சென்ற ஆண்டு 3% ஆகக் கூட்டப்பட்டது. இம்முறை இது இன்னமும் அதிகரிக்கப்படும். இது மட்டுமல்ல, அரச மானியங்கள் அனைத்தையும் வெட்டுவதன் மூலம் - குறிப்பாக விவசாய இடுபொருட்களுக்கான மானியங்களை வெட்டுவதன் மூலம் விவசாயத் துறைக்கு முழுமையான மூடுவிழாவை நடாத்த அது வழிகாட்டியுள்ளது.

இலங்கை அரசுத்தலைவர் மீது போன ஐசன்மானுக்கு நம்பிக்கை இருக்கிறது என்று சொன்னால் அது வெறும் வார்த்தை அல்ல! அவர் எதையும் தமக்காக செய்வார் என்பதை நன்றாகத் தெரிந்து கொண்ட பின் சொல்லப்பட்ட வார்த்தைதான் அது!

→ 11



டேவிட்சன் புதோ.

டேவிட்சன் புதோ 1966இல் உலக வங்கியில் சேர்ந்தவர். அங்கு இருந்த போது இரண்டு ஆண்டுகள் உலக வங்கியின் தலைவருக்கு ஆலோசகராகப் பணியாற்றினார். இந்தியா, கபீரிய நாட்டு அரசாங்கங்களுக்கு ஆலோசகராகப் பணிபுரிந்தவர். 1975 இல் சர்வதேச நிதி நிறுவனத்தில் சேர்ந்தார். 12 வருடங்கள் அதில் பணிபுரிந்தார். 1988 மேயில் அப்பதவியிலிருந்து அவர் ராஜினாமா செய்வதாக கூறி வெளியிட்ட ராஜினாமாக் கடிதம் சர்வதேச நிதி நிறுவனத்தின் தில்லுமுல்லுகளை அம்பலப்படுத்தியது.

கீழே அவர் எழுதிய ராஜினாமாக் கடிதத்தின் ஒரு பகுதியினை தருகிறோம்.


கடிதத்தின் ஒரு பகுதி

...ஆமாம், அன்பிற்குரிய காம் டெஸ்சஸ் அவர்களே! துரதிருஷ்டவசமாக நம் கையில் சிக்கிய வளரும், நாடுகள் பலவற்றில், அவர்களின் பொருளாதார நிதிக் கொள்கைகளுடன் தொடர்புடைய சட்டம், நீதி, நிர்வாகம் போன்றவைகள் நம் பிடியில்தான் உள்ளது. அந்த நாட்டின் நிதி மந்திரியின் பெயரால் நாம் நம்முடைய கடிதத் தலைப்பில் எழுதும் கடிதத்தில் அவர் தன்னுடைய கையெழுத்தினை மட்டுமே இடுகிறார். அக்கடிதத்தில் உள்ளவை அமுல்படுத்தப்படுவதும் நம்மால் மட்டுமே!

அந்நாட்டிற்குத் தேவை என்ன என்பதும், அந்நாட்டிற்கு சரியெனப்படுவது எவை என்பதும் நம்மால் மட்டுமே தீர்மானிக்கப்படுகிறது. அந்நாட்டின் எந்தெந்தத் துறைகளில் என்னென்ன அமுல்படுத்தப்பட வேண்டும் என்பதனை நமது நிறுவனத்தின் அந்தத் துறையோ அல்லது அதன் பிரிவோ தான் அமுல்படுத்துகிறது. பல நேரங்களில் உங்களின் ஒப்புதலோடு உங்களின் பிரதிநிதியாக செயல்படும் ஒருவரால் மட்டுமே அமுல்படுத் தப்படுகிறது. இந்நேரங்களில் அவர் சாதாரண மனிதன் என்பதிலிருந்து மிகுந்த சக்தி வாய்ந்த ஒரு அதிபயங்கர சக்தியாக, அந்நாட்டு மக்களின் தலைவிதியை நிர்ணயிக்கும் சக்தியாக மாறிவிடுகிறார்....

**புனர் நிர்மாண மறுசீரமைப்பு நம்மை எவ்வாறு பாதிக்கிறது?**

**ஏற்றுமதி இறக்குமதியிலான இடைவெளியினை குறைக்க வந்த புனர் நிர்மாண மறுசீரமைப்பு உண்மையில் எவ்வாறு மக்களை பாதிக்கிறது என்பதனைக் காட்டும் ஆய்வு.**



# யாழ்ப்பாணம் இன்று - 3

## சொல்லாமல் போகும் புதல்வர்கள்

**அருணா பரமேஸ்வரன்**

**யா**ழ்ப்பாணம் மாறத் தொடங்கியது. மழைக்கு முன் இருள் பரவத் தொடங்குவது போல, யாழ்ப்பாணம் கருமை கொண்டது.

மெதுமெதுவாகப் பொருட்கள் விலை ஏறின. வியாபாரிகள் பொருட்களைப் பதுக்கினார்கள். புலிகள் வியாபாரிகளிலும் பார்க்க மிக மோசமாகப் பதுக்கினார்கள். அரசாங்கக் களஞ்சியசாலைக்குள் இருந்த அரிசி, மா, சீனி போன்றன அப்படியே புலிகளின் கைக்கு மாறியது. கிளிநொச்சியில் களஞ்சியசாலையிலிருந்து நெல்லை அப்புறப்படுத்துகையில், இராணுவத்தின் ஷெல் ஏவுகைக்கு புலிகளுக்காக நெல்லை அப்புறப்படுத்திய கூலித் தொழிலாளர் எட்டுப் பேர் அந்த இடத்திலேயே மரித்தார்கள். நெல் சிதறியது.

முக்கியமாக எரிபொருள் குதங்கள் சீல் வைக்கப்பட்டன. பெற்றோல் திடீரென்று மாயமாக மறைந்தது. குதங்களிலிருந்து எரிபொருட்கள் நீர் இறைக்கும் இயந்திரத்தின் உதவியினால், இறைத்து பீப்பாக்களில் நிறைத்துப் பதுக்கப்பட்டன. ஆக, எரிபொருட்கள் மக்களுக்குக் கிடைக்காமல் போய் விட்டது. ஆனால் வரும் எனும் நம்பிக்கை இருந்தது. பொதுமக்களின் மோட்டார் சைக்கிள்களும், வாகனங்களும் தங்களது தாங்கிகளில் உள்ள எரிபொருட்கள் தீரும் வரைக்கும் ஓடின.

தொடக்கத்தில் மின்சாரத்திற்கு யாதொரு சேதமுமில்லை. தென்னிலங்கையிலிருந்து மின்சாரம் வந்து கொண்டிருந்தது. துப்பாக்கி வேட்டுச் சத்தங்களும், ஷெல் சத்தங்களும் கேட்கிற போது வீட்டில், கடைகளில் பாடல்கள் கேட்டன. வீட்டில் கமலஹசனோ, ரஜனி காந்தோ, பிரபுவோ குஷ்புவுடனும், கௌதமியுடனும் ஆடிக் கொண்டிருந்தனர். ஆனால் இரவில் வீட்டில் வெளியில் எரியும் லைற்றை நூர்த்தார்கள். லைற் வெளிச்சம் பார்த்து பொம்மர் அடிக்குமோ, ஹெலி சுடுமோ என்று பயம்.

ஒரு பக்கம் போர் நடந்து கொண்டிருந்தது. இராணுவ முகாம் இருக்குமிடங்களைச் சுற்றி குண்டுகள் வெடித்தன. மனிதர்கள் சிதறினார்கள். கட்டிடங்கள் தகர்ந்தன. ஆனால் முகாம்களுக்கு சற்று அப்பால் உள்ள பிரதேசங்கள் யாவும் சுமுகமாகத் தோன்றியது. மக்களுக்கும் புலிகளுக்கும் இடையில் நீண்ட இடைவெளி இருந்தது. அந்த இடைவெளி நிரப்பப்படாமல் இருந்தது.

ஆனால் இக் காலங்களில் அரச பயங்கரவாதமும் மேலோங்கியது. குடாநாட்டின் பல பகுதிகளில் பொம்மர் குண்டுகளைப் பொழிந்தது. ஹெலிகள் தாறுமாறாகச் சுட்டன. வீதியால் வாகனம் சென்றால் போதும், ஹெலிகள் சுடத் தொடங்கின. இதனால் வாகனங்கள் மரக்கிளைகள், கொப்புகளைக் கட்டிக் கொண்டு ஓடின. மற்றும் வாகனப் பயணம் இரவிலேயே நிகழ்ந்தன. ஒருபோதும் பொம்மர், ஹெலி தாக்குதல்கள் புலிகளைத் தாக்கியதில்லை. பொதுமக்களே கொல்லப்பட்டார்கள்.

போராட்டத்திலிருந்து விலகி நின்ற மக்களிடம் போராட்டத்தின் பால் ஈர்ப்பு ஏற்படத் தொடங்கியது. பொதுமக்கள் என்று சொல்வதிலும் பார்க்க இளைஞர்கள், இளம் பெண்கள் போராட்டத்தில் ஈடுபாடு கொள்ளத் தொடங்கினார்கள். பெரும்பாலோர் புலிகளுடன் சேர்ந்தார்கள். மிகக் குறுகிய காலப் பயிற்சியை மேற்கொண்டு அவர்கள் போராடத் தயாரானர்கள். புதல்வர்கள் சொல்லாமல் போகத் தொடங்கினார்கள். ஒரு நாட்டினது இராணுவ அணியைப் போல புலிகளின் இராணுவ அணி பெருகியது. இந்திய அமைதிப்படைக்காலத்தில் புலிகளின் முதுகெலும்பு முறிக்கப்பட்டது என்றார்கள். முதுகெலும்பு அவ்வாறே இருந்தது; வேறு ஏதோ அங்கம்தான் குறிக்கப்பட்டது போல தோற்றம் அளித்தது.

சிறீலங்காவின் தேசிய பந்தோபஸ்து அமைச்சர் ரஞ்சன் விஜயரத்தினா பி.பி.ஸிக்கு அளித்த பேட்டியில் ''பாலர் படை'' என புலிகளின் இராணுவ அமைப்பை கிண்டலடித்தனர். சிறீலங்காவின் இராணுவ அணியைக் கண்டால் ''பாலர் படை''மூத்திரம் பெய்யும் என்பது அவர் கணிப்பு. ஆனால் கிளிநொச்சியிலிருந்து பத்து மைல் தொலைவிலுள்ள கொக்காவில் இராணுவ முகாம் இதே பாலர் படையால் தகர்க்கப்பட்டது.இராணுவ அனுபவம் வாய்ந்தவர்களால் வழி நடத்தப்பட்ட போதும், கிளிநொச்சியில் கல்வி பயின்ற க.பொ. த.சாதாரண தர, உயர்தர மாணவர்களே இதனைத் தகர்தார்கள். இதே நாட்களில் மாங்குளம் இராணுவ முகாம் தகர்க்கப்படுவதற்காக முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும், முயற்சி தோல்வியில் முடிந்தது. ஆயினும் வீட்டுக்கொரு மகன் அல்லது மகள் புலிகளினால் கவரப்பட்டார்கள்.

சண்டை உக்கிரமடைந்தது. மக்களின் மனோபாவங்கள் மாறத்தொடங்கின.

யாழ்ப்பாணம் இப்போது யுத்த பூமி. கந்தக மணம் காற்றில் கலந்தது. கட்டிடங்கள் நொருங்கியதால் சீமெந்துப்புழுதி எல்லா இடங்களிலும் படிந்தது. சோளகம் உக்கிரமாக வீசியது.பகலில் சூரியன் கடுமையாக ஆட்சி செலுத்தினான். இரவில் கடுமையுடன் இருளன் ஆட்சி செலுத்தினான். மின்சாரம் நிறுத்தப்பட்டது. சுன்னாகத்திலிருந்து, டீசல் ஊற்றி இயந்திரம் இயக்கி பகுதி பகுதியாக இரண்டு மணி நேரத்திற்கு மின்சாரம் வழங்கப்பட்டது. புலிகளின் ஆயுதத் தளவாடத் தயாரிப்புக்கு மின்சாரம் தொடர்ந்து வழங்கப்பட்டது. தனது தலைக்குத்தான் குண்டினைப் போடுவது போல, இரு பொம்மர்கள் வந்து சுன்னாகம் மின்சார நிலையத்தில் குண்டுகளைப் பொழிந்தன. யாழ்ப்பாணம் முழுமையாக இருள் பரவியது.

இருளனும், சூரியனும், காற்றும் மாறி மாறி கடுமையாக ஆட்சி செலுத்தின. ஒன்று சொல்லட்டுமா? கடுமையான கோடைக்கு காற்று வீட்டினுள் இருந்தவர்களுக்கு விருப்பமாக இருந்தது. உழைப்புத்தேடி சைக்கிளில் சென்றவர்களுக்குக் கொடுமையாகத் தெரிந்தது. உன்னி உன்னி சைக்கிள் மிதித்த போதும், ஒரு அங்குலம் நகர மறுத்தது. காற்று அவர்களை கடுமையாக சோதித்தது. நாவற்குளி, தச்சன்தோப்பு தாண்டி, கேரதீவு தாண்டுகின்ற போது,வயல் வெளியும், கடல் வெளியும் அதிலிருந்து உக்கிரமாக வீசுகின்ற காற்றும், மேலும் ஒரு அடி நகர விடாமல் தடுத்தது. கொம்படி வெளியினதும், ஊரியான் பாதையினதும் அப்பெரு வெளியில் வீகின்ற காற்று சைக்கிள் வியாபாரிகளை முனைப்புடன் தடுத்து நிறுத்தியது. சைக்கிளால் இறங்கி தள்ளி உருட்டினார்கள். சைக்கிள் நிறைந்த பாரத்துடனும், எதிர்த்து வீசுகிற காற்றுடனும் அவர்கள் முனைப்புடன் போராடினார்கள்.

இதுதான் யாழ்ப்பாணம்.

''பாறை பிளந்து பயன் விளைவிப்பான் என்னூரான்.''

இந்த யாழ்ப்பாணத்தில் ஒருபுறம் போர் நிகழ்ந்தது. மறுபுறம் மக்கள் வாழ்க்கைக்குப் போராடினார்கள். சூழ இருந்து அரக்கர்கள் பல்வேறு ரூபத்தில் பல்வேறு தன்மைகளில் மக்களை வதைத்தார்கள். ஆயினும் மக்கள் வாழ்ந்தார்கள்.

சிறீலங்கா அரசின் இராணுவ பயங்கரவாதம் ஒருபுறம்; புலிகளின் ஜனநாயக மறுப்பு, சர்வாதிகாரம் மறுபுறம். குடும்பத்தின் உறுப்பினர் சொல்லாமல் புலிகளில் சேர்வதோ அல்லது வேறு வகைகளில் கொல்லப்படுவதோ என்பது ஒரு பக்கம், வாழ்க்கையில் தினசரி உணவுக்கான போராட்டம்.

இங்கு மக்கள் பல வழிகளிலும் போராடப் பழகினார்கள், எதையும் எதிர் கொண்டார்கள்.முகம் திருப்பவில்லை; மனம் சலிக்கவில்லை.

மனம் சலித்தவர்களும் இருந்தார்கள். அவர்கள் கொழும்புக்கு மூட்டை முடிச்சுகளைக் கட்டத் தொடங்கினார்கள்.

# ஒரு வார்த்தை எழுத விடு

## அதிகாலையைத் தேடி....

**ஏங்கனை** இல்லாமல் போன தோழனுக்கு, **மரணம்** ஆசிய கவிதைத் தொகுதிகளை வெளியிட்ட **செழியனின்** இன்னொரு கவிதைத் தொகுதி **அதிகாலையைத் தேடி**.

விரக்தி தொனிக்கிற தலைப்புகளைக் கொண்டவை இவரது கவிதைத் தொகுதிகள். ஆனால் தொகுப்பில் உள்ள கவிதைகள் அவ்வாறான தொனியைக் கொண்டவை அல்ல. நம்பிக்கைத் தொனியை இவரது கவிதைகளில் காணலாம்.

முன்னர் குறிப்பிட்ட இரு கவிதைத் தொகுதிகளும் செழியன் ஈழத்திலிருந்த போது வெளி வந்தவை. போராளியாக அவர் தன்னை இனம் காட்டிய போது இத்தொகுப்புக்கள் எங்கள் கைகளில் உலவியது. எனக்குச் சரியாக ஞாபகமில்லை; **மரணம்** தொகுப்பில் கவிதையில் ஒரு வரி இது:**'பேர்லின் விமான நிலையத்தில் வந்திறங்கும் அகதிகள் கூட்டத்தில் என்னைத் தேடி நீ அலையாதே'**.

அதே செழியன் இத்தொகுப்பினை கனடாவிலிருந்து வெளியிட வேண்டிய நிர்ப்பந்தம். இதற்காக செழியனைக் குறை கூற முடியாது.வடக்கில் அவ்வாறு ஒரு சூழல். மக்களை நேசித்த பல கலைஞர்கள் இவ்வாறு தான் புலம் பெயர்ந்தார்கள். அது துரதிர்ஷ்டமான நிலை. செழியன் விதிவிலக்கு அல்ல.

இந்நிலைக்குள் இருந்து கொண்டே இவரது கவிதைகள் பேசுகின்றன. இவரது கவிதைச் செய்திகள் பெரும்பாலும், ஜனநாயக மறுப்பையே விமர்சிக்கின்றன. முன்னைய தொகுப்புகள் சுதந்திரப் போராட்டத்தின் விகசிப்பை எடுத்துக்காட்டிய போதும் இத்தொகுப்பு, அராஜகத்திற்கு எதிரான கருத்து நிலைகளைக் கொண்டுள்ளது. அதனையும் அழுத்தியே கூறுகின்றது.

எனக்குள் எழுகிற கேள்வி முன்னைய தொகுப்புகளுடன் ஒப்பிடுகிற போது இத் தொகுப்பு செழியனின் வளர்ச்சியில் ஒன்றா? அல்லது வீழ்ச்சியில் ஒனறா? பாடுபொருட்கள் மாறுபட்டமையால் இதனைக் கணிப்பது கூட கடினமாக உள்ளது. இதன் பொருள்கள் 1) இறந்த காலத்தை எண்ணி இரங்குதல், 2)துப்பாக்கிக் கலாசாரம் பற்றிக் கூறுவதனூடாக ஜனநாயக மறுப்பைக் கண்டித்தல், (அல்லது கிண்டலடித்தல்) 3) எதிர் காலத்தில் போராட்டம் பற்றி நம்பிக்கையை ஊட்டல். எத்தகைய பொருளும் இதில் தெளிவாக்கப் படாததனால் இத் தொகுப்பு முழுத் திருப்தியைக் கொண்டமையவில்லை.

இத்தொகுப்பின் முக்கிய குறைபாடாக நான் கருதுவது, செழியனின் கவிதையில் சேரனின் பாதிப்பு நிறையவே தெரிவது. இதற்கு உதாரணங்கள் வேண்டுமா? **''துப்பாக்கிகளைப் பற்றி''** என்பது ஒரு உதாரணம். ஆனால் எல்லா வரிகளிலும் சேரனை ஒரு முறை தரிசிக்கலாம். செழியனால் இதனை மீற முடியாத? மீற முடிந்தால், செழியனால் உச்சங்களைத் தொடமுடியும்.

அட்டைப்படம் யாழ்ப்பாணம் போய் வந்த சுகானுபவத்தைத் தருகிறது.

## விடிவு

**கண்டியிலிருந்து** மக்கள் கலை இலக்கியப் பேரவையால்வெளியிடப்படுகிற சஞ்சிகை. 16 இதழ்கள் வெளி வந்து விட்டன. கொழும்புச் சூழலில் 16 இதழ்கள் வெளி வருவது சாதனை. பல விஷயங்களை தாங்கி வெளிவருகிறது.அது கூட ஒரு குறை போலப் படுகிறது. கலை , இலக்கியச் சஞ்சிகையா, அரசியல் சஞ்சிகையா, அறிவியல் சஞ்சிகையா? தெளிவற்றிருக்கிறது. முதலில் தெளிவாக்க வேண்டும். எந்த வாசகர்களுக்கு, எத்தகைய சஞ்சிகைகளை வழங்கப் போகிறோம்? இது சஞ்சிகையின் வளர்ச்சிக்கு அவசியமான விடயம். முதலில் இலக்கு தெளிவாக வேண்டும்; பின்னரே பயணம் தொடங்க வேண்டும். முதலில் பயணம்; பின்னரே இலக்கை தெளிவாக்குவோம் என யோசித்தால் பயணம் தடைப்பட்டுவிடும். சிறிய ஆலோசனை - சஞ்சிகையின் அமைப்பினை இன்னும் அழகாகக் கொண்டு வரலாம். சஞ்சிகையின் ஆசிரியருடைய கவிதை என்பதால் முன் பக்கத்தில் பிரசுரிக்க வேண்டுமென்றில்லை. தரமான கவிதைகளை முன் அட்டையில் பிரசுரிக்கலாம். விடிவு இன்னும் தரமான சஞ்சிகையாக வெளிவர வேண்டுமென்பதே எமது விருப்பம்.

**சூர்யா.**

நன்றி - நூலகத்திட்டம்





# அமெரிக்காவின் அடுத்த குறி: வட கொரியா

அமெரிக்கப் போர்க் கப்பல்களில் இருந்து ஈராக் மீது வீசப்பட்ட 23 ஏவுகணைகள் விழுந்து வெடித்ததில் ஆறு பேர் கொல்லப்பட்டதாகவும் இருபதுக்கு மேற்பட்டோர் காயமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது. கடந்த ஏப்பிரல் மாதம் குவைத்துக்கு சென்றிருந்த முன்னால் அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் புஷ்ஷை கொல்வதற்கு கார்க் குண்டொன்றை ஈராக்கியர்கள் தயார் செய்திருந்ததாகவும், அதற்குப் பதிலடியாகவே, ஈராக்கின் உளவுத்துறை தலைமையகத்தின் மீது இக்குண்டு ஏவப்பட்டது என்றும் அமெரிக்க ஜனாதிபதி கிளின்ரன் அறிவித்துள்ளார். ஆயினும் இந்த ஏவுகணைகள் குடிசன நெரிசலான பகுதிகளிலே விழுந்து வெடித்தன என்று பக்தாத் அறிவித்துள்ளது.

கிளின்ரன் - நிர்வாகம் வந்தபின் அமெரிக்காவுடன் நல்லுறவை ஏற்படுத்திக் கொள்ள முடியும் என ஆரம்பத்தில் பக்தாத் நினைத்திருந்த போதும், விரைவிலேயே, ஜோர்ஜ் புஷ்ஷின் போக்கிலேயே தனது போக்கும் அமையும் என்று கிளின்ரன் அறிவித்ததை தொடர்ந்து அந்த நம்பிக்கை அர்த்தமற்றுப் போயிற்று.

ஈராக்கின் அணு ஆயுதத் தயாரிப்பு முயற்சிகளை பரிசீலனை செய்ய வென்று ஐக்கிய நாடுகளின் பாதுகாப்புச் சபையால் அனுப்பப்பட்ட நிபுணர்கள் எவ்வளவோ முயற்சி செய்தும் ஈராக்கின் மீது அணுவாயுதம் தயாரிக்கும் குற்றச்சாட்டை உருப்படியான முறையில் சுமத்த முடியவில்லை. ஜெனீவாவிலுள்ள பாதுகாப்புச் சபையின் சார்பில் அனுப்பப்பட்ட இந்த ஊழியர்கள் உண்மையில் ஜெனீவாவைவிட வாஷிங்டனையே தமது தலைமையகமாகக் கொண்டு செயல்பட்டு வருகிறார்கள் என்ற குற்றச்சாட்டு பரவலாகத் தெரிவிக்கப்படுகிறது.

இந்த ஐ.நா பாதுகாப்புச் சபையின் பரிசோதனை நிபுணர்கள் உண்மையில் ஈராக்கின் அணு ஆயுத உற்பத்தியில் காட்டும் நாட்டத்தை விட அதன் மற்றைய இராணுவ இரகசியங்களை அறிந்து அமெரிக்காவுக்குத் தெரிவிப்பதிலேயே கவனமாக இருக்கின்றார்கள்.

அமெரிக்காவின் கைப்பொம்மையாக குறுகிப்போன இந்தப் பாதுகாப்புச் சபையின் கண்காணிப்பு இப்போது குவிக்கப்பட்டிருப்பது வடகொரியாவின் மீதாகும். சோவியத்தின் சரிவுக்குப் பிறகு பலமிழந்து போன வடகொரியாவை அடிபணிய வைக்க தென் கொரிய, அமெரிக்க, ஜப்பானிய கூட்டணியினர் தீவிர முயற்சி எடுத்து வருகின்றனர். தென் கொரியாவுக்கும் வடகொரியாவுக்கும் இடையிலான உறவு யுத்தமாக நீடித்துக் கொண்டிருக்கின்ற இவ்வேளையில் அமெரிக்க தென்கொரிய உறவு மிகவும் பலமிக்கதாக இருக்கும் இந் நிலையில் இப் பாதுகாப்புச் சபையின் பரிசோதனை முயற்சிகளை வட கொரியா அச்சத்துடன் பார்ப்பது முக்கியமானதே.



வட கொரியா மனித அழிவு ஆயுதங்களை உற்பத்தி செய்வதாக சர்வதேச அரங்கில் பிரச்சாரித்து வரும் தென் கொரிய அமெரிக்க ஜப்பானிய கூட்டும் மேற்கத்தைய தொடர்பு சாதனங்களும் கடந்த சில மாதங்களாக வட கொரியா மீதான அணு ஆயுதப் பரிசீலிப்பை தொடர்ந்து வலியுறுத்தி வருவதுடன் அதன் இராணுவ முக்கியத்துவம் வாய்ந்த கேந்திரப் பிரதேசமான ஜோங்வையோன் (YO-NGBYON) இனை பரிசீலிக்க வேண்டுமென வலியுறுத்தி வருகின்றன.

இந்த முயற்சியானது தென் கொரியாவுக்கு தமது இராணுவ ரகசியங்களைத் தெரிவிக்க அமெரிக்கா கையாளும் சதி எனக் குறிப்பிடும் வட கொரியா அணுவாயுத ஒப்பந்தத்தில் (NPT) இருந்து தன்னை விலக்கிக் கொண்டுள்ளது. இதை தொடர்ந்து கிழக்காசியாவின் 'அடுத்த ஈராக்காக வட கொரியா மாறியுள்ளதாக மேற்கத்தைய தொடர்பு சாதனங்களும் அமெரிக்க ஜப்பானிய அரசுகளும் வட கொரியா மீது முத்திரை குத்தி வருகின்றன.

இந்த அணுவாயுதக் குறைப்பு ஒப்பந்தத்தில், தானாக முன் வந்து 1985 இல் சேர்ந்த வட கொரியா கடந்த மார்ச் மாதம் அதிலிருந்து விலகுவதாக அறிவித்தது. வியன்னாவினைத் தளமாகக் கொண்டுள்ள ''சர்வதேச அணுசக்தி நிறுவனத்தின்'' (IAEA) ஜோங்வையோன் மீதான கண்காணிப்பு நோக்கத்தை மறுத்தே அது இவ்வாறு செய்துள்ளது. மேற்கத்தைய நாடுகள் சில ஜோங்வையோன் மீது விமானத் தாக்குதல் நடாத்துமாறும் அபிப்பிராயம் தெரிவித்துள்ளன.

உண்மையில் இந்த அணுவாயுதக் குறைப்பு ஒப்பந்தம் ஒரு ஏமாற்று ஒப்பந்தமே. இவ் வொப்பந்தம் ஏற்கனவே அணு ஆயுதங்களை கொண்டிருக்கும் நாடுகளை அவற்றைக் கொண்டிருக்க அனுமதிக்கும் அதேவேளை, புதிதாக அவற்றை உருவாக்கக் கூடிய நாடுகள் அவற்றை உருவாக்கவோ, வாங்கவோ கூடாது என்று குறிப்பிடுகிறது. சமமான அந்தஸ்தும் இறைமையும் கொண்ட நாடுகளின் சமுதாயம் ஒன்றின் மீது இப்படி இரட்டைத்தனமான ஒரு ஒப்பந்தம் திணிக்கப்படுவதை எந்த ஒரு சுயமரியாதை உள்ள நாடும் ஏற்றுக் கொள்ளாது என்பது வெளிப்படை. இத்தகைய தொழில்நுட்ப ரீதியிலான ஒடுக்குமுறை சிறிய நாடுகள் மீது திணிக்கப்படுவதற்கேற்ற விதத்தில் உருவாக்கப்பட்டதே இந்த ஒப்பந்தமாகும். உண்மையில் இவ்வொப்பந்தம் ஏற்கனவே அணு ஆயுதங்களைக்

→ 8

# மலையகக் குறிப்பேடு

## வாக்களிப்பும் கைமாறும்

ஊவா மாகாண சபையில் ஆளும் கடசியில் இரு இ.தொ.கா உறுப்பினரும் ஒரு ஐ.தே.க. உறுப்பினருமாக மூன்று மலையகத் தமிழர்கள் இருந்தார்கள். இவர்களில் ஒருவர் அமைச்சராகவும் இருந்தார். எனினும் 1991ம் ஆண்டு பதுளை, பசறை பகுதிகளில் வாழும் தமிழர்களுக்கு எதிராக பொலிசாரினால் கட்டவிழ்த்து விடப்பட்ட இனவாத அடக்கு முறைகளுக்கு எதிராக இவர்கள் என்ன செய்தார்கள்? அப்போது எவ்விதக் குற்றமுமின்றி கைது செய்யப்பட்ட பல தமிழர்கள் இன்றும் சிறைச்சாலைகளில் அடைத்து வைக்கப்பட்டுள்ளார்கள். சிலர் தமது சொந்த முயற்சியினால் விடுதலையடைந்தார்கள்.

இத்தகைய நிலைமைகள் தொடரும் அதே வேளையில் நடைபெற்று முடிந்த மாகாண சபைத் தேர்தல்களில் மலையக மக்கள் பெரும்பான்மையாக இ.தொ.கா. உறுப்பினர்களையும், ஐ.தே.கட்சியையும் ஆதரித்து வாக்களித்துள்ளார்கள். இந்த நிலைமைக்கான காரணம் மலையக மக்களுக்கு வாக்களிப்பதற்கு வேறுயாரும் இல்லாமையா? அல்லது நாட்டில் ஐ.தே.க. அரசு நடைமுறைப்படுத்தும் இன ஒடுக்குமுறை அரசியலின் காரணமாக மலையக மக்கள் அனுபவித்து வரும் இன்னல்களையும், அவற்றைத் தடுத்து நிறுத்த தகுதியற்ற இ.தொ.காவின் நிலைகளைப் பற்றியும் புரிந்து கொள்ள முடியாத அளவுக்கு இவர்கள் அறியாமையில் இருப்பதுவா? அல்லது தோட்டத் தொழிலாளர்கள் குடியிருக்கும் வீடும், பயிர் செய்யும் தோட்டக் காணியும் 1993 மே மாதம் 30ம் திகதிக்கு முன் தொழிலாளர்களுக்கே சொந்தமாகும் என இ.தொ.கா. நடத்திய பிரச்சாரத்திற்கு ஏமாந்தமையா என்பது ஆராயப்பட வேண்டிய விடயமாகும்

எனினும் மாகாண சபைகளுக்கான தேர்தல்கள் முடிந்ததுதான் தாமதம். தலைநகரில் பேரினவாத வெறியாட்டத்தைக் கட்டவிழ்த்து விட்டு விட்டார்கள் பொலிஸார். புலிகளைத் தேடும் போர்வையில் எல்லாத்தமிழர்களையும் கைது செய்வதும், தடுத்து வைப்பதுவும் பரவலாக நடைபெறுகின்றது. முன்பைவிட இம்முறை மலையகத்தமிழர்கள் ஏராளமானோர் கைது செய்யப்பட்டுள்ளார்கள். இவர்கள் சில நாட்களின் பின் விடுதலை செய்யப்பட்டாலும் உளவியல்ரீதியாகப் பல்வேறு பாதிப்புகளுக்கு ஆளாகியிருக்கின்றதோடு பயத்துடனும், பீதியுடனும் வாழவேண்டிய நிலைமை ஏற்பட்டுள்ளது. பல மலையக இளைஞர்கள் தங்களது தொழில்களையும், கல்வியையும் விட்டு விட்டு தமது மலையக இருப்பிடங்களுக்குச் சென்றுள்ளனர். மலையக மக்கள் பெரும்பான்மையாக ஐ.தே.கட்சிக்கு ஆதரவளித்ததற்காக அவர்களுக்கு இவ்வரசினாலும் அதன் பாதுகாப்பு பிரிவினராலும் அளிக்கப்படும் உடனடி சன்மானம் இதுதான்.

இலங்கையின் அரசாங்கத்தில் மூன்று மலையகத்தமிழர் அமைச்சர்களாகவும், மூவர் ஐ. தே.கட்சியின் மாகாணசபை உறுப்பினராகவும் இருந்தும் இந்த இனவாத அட்டூழியங்களைத் தடுத்து நிறுத்த அருகதையற்றவர்களாகவே இருக்கின்றனர் என்பது இக்கைதுகள் தொடருவதன் மூலம் தெளிவாக்கப்பட்டுள்ளது.

இந்த நிலைமைகள் ஒட்டுமொத்தமாக கோடிட்டுக்காட்டும் உண்மை என்னவென்றால், மலையயக மக்கள் நம்பியது போல தமது அரசியல் ஆதரவுகளை எவ்வித நிபந்தனையும் இன்றி மொத்தமாக வழங்குவதன் மூலமோ அல்லது கடந்த 15 வருடங்களுக்கு மேலாக இ.தொ.காங்கிரஸின் தலைமைகள் ஐ.தே.கட்சிக்கு வழங்கிய ஆதரவுகளின் மூலமோ மலையக மக்களின் தனித்துவத்தையோ, சமூகப் பொருளாதார சமத்துவங்களையோ அல்லது தேவையான பாதுகாப்புகளையோ ஐ.தே.கட்சி அரசிடமிருந்து பெற்றுக்கொள்ள முடியாது என்பதுவும், ஐ.தே.கட்சி அரசானது தனது பேரினவாத நிலைப்பாடுகளிலும், சிறுபான்மை இன மக்கள் மீது நடத்திவரும் அடக்கு முறை நடவடிக்கைளை நிறுத்த ஒரு போதும் சம்மதிக்காது என்பதுமாகும். ஆக இ.தொ. காங்கிரஸின் தலைமைகளுக்கும் அவர்களின் கைபிடிகளுக்கும் வழங்கிய சில சலுகைகள் தான் இதுவரைக்கும் கிடைத்த இலாபங்களாகும்.

-மலைஞானி

நன்றி - நூலகத்திட்டம்



# வட - கிழக்கு இணைப்பு கருத்துக் கணிப்பு - ஒரு சதி

## அரவிந்தன்

மங்கள முனசிங்க தலைமையிலான பாராளுமன்ற தெரிவுக்குழு தனது அந்திமகாலத்தில் தமிழ் உறுப்பினர்களின் பங்குபற்றுதலன்றி விவாதித்தபின் அறிவித்த உப்புச்சப்பற்ற தீர்வை யடுத்து ''ஏகமனதாக'' தீர்மானித்துள்ள முடிவுதான் இலங்கை - இந்திய ஒப்பந்தத்தின் பிரகாரம் குறிப்பிடப்பட்டு காலவரையறையற்று நீடிக்கப்படுமென வாய்ச்சொல்லால் தமிழ்க் கட்சிகளுக்கு உறுதியளிக்கப்பட்ட கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பினை நடாத்துவது என்பதாகும். இந்த வாக்கெடுப்பு எப்பவோ நடாத்தப்பட்டிருக்க வேண்டும் என்றும் இப்போதாவது அதை நடாத்த அரசு முன் வரவேண்டும் என்றும் கருதும் கட்சிகள் மத்தியில் இன்றுள்ள ஒரே பிரச்சினை இதை நடைமுறைச் சாத்தியமாக்குவது எப்படி என்பதே. கிழக்கின் முழுப் பிரதேசமும் தமது கைக்கு வந்து விட்டது போல் இராணுவம் கூறுகின்ற போதும், வாக்கெடுப்பு ஒன்றை நடாத்துமளவுக்கு அது அங்குள்ள நிலமையை இதுவரை சரியாக உத்தரவாதப்படுத்தவில்லை. ஏற்கனவே அகதிகளாக உள்ளவர்கள் கிழக்கிலும் வடக்கிலும் தெற்கிலுமுள்ள முகாம்களில் உள்ளனர். ஏராளமான தமிழ் முஸ்லீம் மக்கள் இடம்பெயர்ந்துள்ளனர். அகதிமுகாம்களிலுள்ள மக்களை பாதுகாப்பாக மீளக் குடியமர்த்த இதுவரை முயலாத அரசு வாக்கெடுப்பு நடத்துவது என்பது சாத்தியமா என்பதே இக்கட்சிகளின் சந்தேகம். தமிழ் கட்சிகளைப் பொறுத்தவரை அவை இந்த வாக்கெடுப்பை பொதுவாகவே எதிர்க்கின்றன. ஆயினும், இந்த வாக்கெடுப்பினை நடாத்த அரச தரப்பில் முயற்சிகள் தொடங்கியுள்ளன என்பது மட்டும் இப்போது தெளிவாகியுள்ளது. அண்மையில் விவேகானந்தா மண்டப அகதிளை வெளியேற்ற எடுத்த முயற்சிகள் இதை தெளிவாகக் காட்டுகின்றன!

### தமிழ்க் கட்சிகளின் அவமானம்

இக் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பை எதிர்க்கும் தமிழ்க் கட்சிகளின் நிலை மிகவும் பரிதாபகரமானதாக உள்ளது. மெல்லவும் முடியாமல் விழுங்கவும் முடியாமல் அவை தடுமாறுகின்றன. ராஜீவ் காந்தியிடமும், அவர் தலைமையில் இயங்கிய காங்கிரஸ் கட்சியிடமும் வடக்கு கிழக்கு தமிழ் பேசும் மக்களின் தலைவிதியை தீர்மானிக்கும் உரிமையைக் கையளித்து விட்டு கைகட்டி வாய் பொத்தி இந்தியாவுக்கு பின்னால் தலையாட்டி பொம்மைகளாக நின்ற இந்த தமிழ் கட்சிகள் அனைத்தும் -புலிகள் உட்பட - ராஜீவ்காந்தி என்ற தனிநபர் மீது நம்பிக்கை வைத்திருக்கிறோம் என்றும் அவர் நம்மைக் கைவிட மாட்டார் என்றும் தமிழ்மக்களுக்கு அறிவித்தன! இலங்கை - இந்திய ஒப்பந்தம் என்ற சதிவலைக்கு உடன்பட்டு நிற்குமாறு தமிழ் மக்களுக்கு அறிவுறுத்தின. தமது அரசியல் மதிநுட்பத்தை தாமே மெச்சிக் கொண்ட இந்தக் கட்சிகள் இதன் மூலம் முதன் முதலாக தமிழ் மக்களிடையே அரசியல் ரீதியான பிளவொன்றை இலங்கை அரசு கண்டு கொள்ள வாய்ப்பளித்தன.



வடக்கு கிழக்கு மாகாணங்களை இணைப்பதற்காக கிழக்கு மாகாண மக்கள் மத்தியில் கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பு நடாத்தப்பட வேண்டும் என்ற இலங்கை-இந்திய ஒப்பந்தப் பிரகாரம் ஏற்றுக்கொள்ளப் பட்ட முடிவு, ஒரு தலைப்பட்சமானது என்றோ, இரண்டு மாகாணங்களை இணைப்பதற்கு ஒரு மாகாணத்தில் மட்டும் வாக்கெடுப்பு நடாத்துவது போதுமானதல்ல என்றோ, இத்தகைய வாக்கெடுப்பில் திட்டமிட்டு குடியேற்றப்பட்ட சிங்களவர் நிலை என்னவென்றோ, இதுவொரு சுத்த ஏமாற்று என்றோ எந்தக் கட்சிகளும் அன்று எதிர்க்கவில்லை. ராஜீவ்காந்தியின் வாக்குறுதியுடன் இது தொடர்பாக அவர்களுக்கு இருந்த எல்லா சந்தேகங்களும் தீர்ந்து போயிருந்தன. இப்போது பாராளுமன்ற தெரிவுக்குழு வாக்கெடுப்பு நடாத்தப்படவேண்டும் என்று சொன்னவுடன் இறந்து போன ராஜீவின் வாய்ச் சொல்லை கேலிக்குரிய விதத்தில் துணைக்கழைக்கின்றன. ராஜீவ்காந்தி படுக்கையறையில் வைத்து சொன்னதை கூட இவர்கள் முடிவாக்கப் பார்க்கிறார்கள் என சிங்கள பேரினவாதக் கட்சிகள் இவர்களை அவமானப்படுத்துகின்றன.



Jayewardene.

### ஜே ஆரின் அறிவிப்பு

இலங்கை இந்திய ஒப்பந்தம் கைச்சாத்தாவதற்கு சில நாட்களுக்கு முதல் கட்சியின் தேசிய நிறைவேற்றுக் கமிட்டி கூட்டத்தில் பேசிய போது அப்போதைய ஜனாதிபதி ஜே. ஆர் இவ்வாறு கூறி இருந்தார்...

**''ஒரேயொரு விடயத்தை மட்டும் நாம் கவனித்தாக வேண்டும். அதாவது இந்த வடக்கு கிழக்கு இணைப்பு வெறும் தற்காலிகமானது மட்டுமே! அடுத்த ஆண்டு (1988) முடிவதற்குள் ஜனாதிபதியால் நியமிக்கப்படும் திகதி ஒன்றில் ஒரு கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு நடாத்தப் பட்டு கிழக்கு மாகாண மக்கள் இந்த இணைப்புக்கு ஆதரவா இல்லையா என்று அறிந்து கொள்ளப்படும். முடிவு சாதாரண பெரும்பான்மையடிப்படையில் தீர்மானிக்கப்படும் அம்பாறை உள்ளிட்ட கிழக்கு மாகாணத்தில் 33% முஸ்லீம்களும் 27% சிங்களவர்களும் 40% தமிழர்களும் உள்ளனர். இவர்களில் அரைப்பங்குக்கு மேற்பட்டோர் மட்டக்களப்பு தமிழர்களாவர். மீதியினர் யாழ்ப்பாணத் தமிழர்கள் ஆவார். கிழக்கிலுள்ள இந்த 20% மான யாழ்ப்பாணத் தமிழர் தவிர்ந்த 80% ஆனோரும் இணைப்புக்கு எதிர் என்றே நான் நினைக்கின்றேன். திரு. தேவநாயகமும், திரு. மஜீதும் அவ்வாறே கூறுகின்றனர். ஆகவே ஒரு கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பை நடாத்தினால் -நான் நினைக்கிறேன்- இணைப்பு இல்லாமலே போய் விடும்! இந்த தற்காலிக இணைப்பு மூலம் நாம் உண்மையில் பெறுவதென்னவென்றால் இது பயங்கரவாத இயக்கம் ஒழிக்கப்பட பெரும் உதவியளிக்கும் என்பதேயாகும்.''**

இவ்வளவு தெளிவாகவும் உறுதியாகவும் சிங்கள பேரினவாத சக்திகளுக்கு திட்டமிட்டுக் கொடுத்து கூறப்பட்ட இணைப்பை ஏமது தமிழ் கட்சித் தலைமைகள் வரப்பிரசாதம் என்று கூறி அங்கீகரித்தனர். கடந்த கால அனுபவத்தில் இத்தகைய அப்புக்காத்துச் சுழிப்பு அரசியலின் ராஜதந்திரங்கள் திரும்பத் திரும்ப தோற்றுப் போன பின்னும் மக்களுடைய நலன்களை பாதுகாக்கவும் அதற்காகப் போராடவும் திராணியற்று தமிழ் தலைமைகள் மீண்டுமொருமுறை தமிழ் மக்கள் உரிமையை விலை பேசினர்; 13வது திருத்தச்சட்டம் என்ற உப்புச்சப்பற்ற சதிவலையை அங்கீகரித்து அரசுடன் இணைந்தனர்; சிங்கக்கொடி ஏற்றி மகிழ்ந்தனர்! அடுத்தடுத்து கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பு நீடிக்கப்படுவதை பார்த்து தம் மைத்தாமே மெச்சிக்கொண்டனர். இன்று பாராளுமன்ற தெரிவுக்குழு வாக்கெடுப்பு நடாத்துவதாக சொன்னதும் இந்தியாவுக்கு முறையிடவும், குய்யோ முறையோ என்று ஒப்பாரிவைக்கவும் மட்டுமே அவர்களுக்கு முடிகிறது.

1977 தேர்தலில் வெற்றி பெற்றவுடன் வெளவால்களை ''வாவென்று கூறி வருந்தி அழைக்க '' இந்தியா சென்ற கூட்டணி தலைமை முதல், அண்மையில் தமது காங்கிரசைக் கூட்டி இந்தியாவுக்கு புது அழைப்பு விடுத்த ஈ.பி.ஆர்.எல்.எப். வரை யாருக்கும் வடக்கு கிழக்கு மக்களின் பிரச்சினையை தீர்க்க மக்களைச் சார்ந்து நின்று போராடும் எண்ணம் இருக்கவில்லை. வடக்கு கிழக்கு தமிழ் பேசும் மக்களின் உரிமைக்குரலை எழுப்ப, ஒரு போதும் தமது சொந்த மக்கள் மீது நம்பிக்கை வைத்து இவர்கள் முயன்றதில்லை. இலங்கை - இந்திய ஒப்பத்தந்தின் போது தெட்டத் தெளிவாகிய இந்திய மேலாதிக்கத் திணிப்பு, தமிழ் மக்களையும் அவர்களது போராட்டத்தையும் நசுக்க இந்தியா எடுத்த முயற்சி எவற்றையும் இவர்கள் கண்டு கொள்ளவில்லை. 'சமாதானப் படை' அமைதி காப்பதென்ற பெயரால் வடக்கில் யுத்தத்தைத் தொடங்கி தமிழ் மக்கள் உடல்கள் மீது டாங்கிகளை ஏற்றிக் கொண்டிருக்கையிலும் தூரதர்ஷனில் இந்தியாவை ஆதரிக்குமாறு இந்த தமிழ் தலைமைகள் கோரிக்கை விடுத்தன!

ஜே.ஆரின் திட்டமிட்ட வடக்கு கிழக்கு பிரிப்புக்கான அரசியல் சதியான கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பையும், 13வது திருத்தச் சட்டமூலம் அறிமுகப்படுத்தப்பட்ட 'மாகாண' சபைப்யையும் இவை அங்கீகரித்தன! தமிழ் மக்களின் பிரச்சினையைத் தீர்க்க முழு இலங்கைக்கும் மாகாண சபை முறைமை அறிமுகப்படுத்தியதன் சதி நோக்கமே வடக்கு கிழக்கை பிரிப்பதல்லாமல் வேறல்ல என்பதை இவர்கள் நம்பவில்லை. ராஜீவ்காந்தி தமக்குக் கூறியது போலவே ஜே.ஆருக்கும் 'வாய்சொல்' வழங்கியிருக்க முடியாதா என்று இந்த அரசியல் தலைமைகள் நினைக்கக் கூட தயாராக இருக்கவில்லை.

### வாக்கெடுப்பின் அரசியல்

உண்மையில், இந்த தற்காலிக இணைப்பு என்பது ஏன் ஒரு பிரச்சினைக்குரிய விடயமாகிப் போனது? வடக்கு கிழக்கு இணைப்பை ஏன் சிங்களக் கட்சிகள் எதிர்க்கின்றன? ஊவாவையும் மத்திய மாகாணத்தையும் அல்லது மேல் மாகாணத்தையும், வடமேல் மாகாணத்தையும் இணைத்திருந்தால் இப்படி ஒரு பிரச்சினை உருவாகி இருக்குமா? அதை சிங்கள மக்கள் எதிர்த்திருப்பார்களா? ஏன் வடக்கு கிழக்கு மாகாணத்தை இணைப்பது மட்டும் பிரச்சினையாகிப் போனது? இலங்கை - இந்திய ஒப்பந்தத்தை அமுல்படுத்த ஏன் ஜே.ஆர் ஒரு 'தற்காலிக' இணைப்பு பற்றி பேச வேண்டி வந்தது? வடக்கு கிழக்கு இனணப்பில் வடக்கு மாகாண மக்களின் கருத்தை அறிவது முக்கியம் என்று ஏன் இலங்கை கருதவில்லை?

இந்தக் கேள்விகளுக்கு பதில் தேடுவோமானால் எமக்கு இவ் வாக்கெடுப்பு பிரச்சினையின் அரசியல் அடிப்படையை இலகுவில் புரிந்து கொள்ள முடியும். வடக்கு கிழக்கை 'தற்காலிக இணைப்பு' மூலம் இணைப்பதாகக் கூறுவதன் மூலம் அரசு தெரிவிக்க விரும்பியது ஏற்கனவே ஒன்றாக இருந்த இவை இரண்டும் ஒன்றல்ல என நிரூபித்தலையே ஆகும். 1940 களில் ஆரம்பமான வடக்கு கிழக்கைத் துண்டாடும் திட்டம் அறுபதுகளில் மிகத் தீவிரம் அடைந்தது. வடக்கு கிழக்கைப் பிரித்து 'பாதுகாப்புக் கோட்டை'களை அமைக்கும் விதத்தில் திட்டமிட்ட குடியேற்றங்களை நிறுவுவது மலையகத் தமிழர்களின் வாக்குரிமை பறிக்கப்பட்டதுடன் திட்டமிடப்பட்ட ஒன்றாகும். முடிந்தளவு சிங்களக் குடியேற்றங்களை ஏற்படுத்தி தமிழர் வாழும் பிரதேசங்களில் அவர்களை சிறுபான்மையினராக்கும் முயற்சியில் கிழக்கில் ஆரம்பித்த குடியேற்றங்கள் பெரு வெற்றியை சாதித்தன. தமிழர் பெரும்பான்மையாக இருந்த கிழக்கு மாகாணம் விரைவில் - கடந்த 40 ஆண்டுகளில் - தமிழரை



சிறுபான்மையினராகக் கொண்ட ( ஜே.ஆர் சொல்வதின்படி 40% ) மாகாணமாக மாற்றப்பட்டது. இனவாதத்தை அடிப்படையாக வைத்து உருவாக்கப்பட்ட சிங்களப் பேரினவாத கட்சியான யூ.என்.பியும் பிற பேரினவாதக் கட்சிகளும் (கிழக்கு மாகாணத்தைத் தமிழர்களது பாரம்பரிய பிரதேசம் அல்ல என்று சாதித்து வந்தவையே இக் கட்சிகள்) அதை வடக்குடன் இணைப்பதை ஏற்காததன் அடிப்படை இதுவே. இலங்கையின் எல்லாப் பகுதிகளிலும் தமிழர்களைச் சிறுபான்மையினராக்கும் திட்டத்தில் படிக்கல்லாக கடந்த நாற்பதாண்டு காலமாக கிழக்கில் செய்து வந்த சதியை இலங்கை - இந்திய ஒப்பந்தத்துக்காக விட்டுக் கொடுத்தலாகிய 'துரோகச்' செயலை செய்யவில்லை என்று நிரூபிப்பது ஜே. ஆருக்கு அவசியமாயிருந்தது. தான் செய்தது துரோகம் அல்ல வடக்கு கிழக்கை நிரந்தரமாகப் பிரிக்கப் போட்ட ஒரு திட்டமே என்பது நிரூபிக்கப்பட வேண்டியதாக இருந்தது அவருக்கு. (பாவம் அவர்; சிங்களவரைச் சமாதானப்படுத்த அவர் அப்படிச் செய்கிறார்; ராஜீவுக்காக அவருக்கு விட்டுக் கொடுப்போம்; அதற்காக எமது மக்களுக்கு நாம் துரோகமிழைத்தாலும் பரவா

நன்றி - நூலகத்திட்டம்



யில்லை என தமிழ்க் கட்சிகள் முடிவு கட்டின என்பது வேறு விடயம் ) உண்மையில் அவர் சிங்களப் பேரினவாதம் தொடர்ந்து நிலவவும், அதன் மூலம் தமது அரசிருப்பை பாதுகாக்கவுமே அவ்வாறு செய்தார். இலங்கையில் தமிழ் மக்களை ஒரு தேசிய இனமே அல்ல என ஆக்குவதற்கான அரசியல் சதியின் ஜே.ஆர் பாணி வடிவம்தான் இந்தக் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பும் தற்காலிக இணைப்புமாகும்!

### தற்போதைய நிலை

பாராளுமன்றத் தெரிவுக் குழு அறிவித்துள்ளபடி ஒரு வாக்கெடுப்பு கிழக்கில் நடாத்தப்படுமானால், அது கிழக்கின் பாரம்பரிய தமிழ் முஸ்லிம் மக்களில் 40% மக்களின் வாக்குகளைப் பெறுவது சாத்தியமா என்பதே கேள்விக்குறியாகும். அகதி முகாம்களிலும் இடம் பெயர்ந்தும் உள்ளவர்கள், இன்னமும் புலிகளின் கட்டுப்பாட்டிலுள்ள பகுதிகளில் உள்ளவர்கள் வாக்களிப்பது சாத்தியமே இல்லை. கிழக்கில் செயற்கையாக (குடியமர்த்தப்பட்டதன் மூலம்) உருவாக்கப்பட்ட சிங்கள மக்களின் வாக்குகளை மட்டும் வைத்துக் கொண்டு சாதாரண பெரும்பான்மையைக் காரணம் காட்டி என்றென்றைக்குமாக கிழக்கை வடக்கிலிருந்து பிரிக்கத் தீர்மானிப்பதாகவே இது அமையும். வடக்கு கிழக்கு இணைப்பைப் பற்றிய அபிப்பிராயத்தை வடக்கு கிழக்கினைப் பாரம்பரிய பிரதேசமாகக் கொண்ட மக்களிடம் மட்டும் கேட்பதுதான் உண்மையில் நியாயமானதாகும். ஆனால் அரசு, வடக்கு மாகாண மக்களின் அபிப்பிராயத்தைப் பற்றி அக்கறைப்படவே இல்லை. கிழக்கு மாகாணத்திலும் யார் யார் வாக்களிக்கப் போகிறார்கள் என்பதும் இதுவரை உறுதிப்படுத்தப்பட வில்லை. வடக்கிலும் தெற்கிலும் இந்தியாவிலும் உள்ளவர்களை கிழக்குக்குக் கொண்டுவராமலும், வாக்கெடுப்பு தொடர்பாக புலிகளுடன் ஒரு உடன்பாட்டுக்கு வராமலும் தேர்தல் நடாத்தப்படுவது ஏமாற்று நடவடிக்கையாகவே அமையும். ஆனால், அரசு வாக்கெடுப்பு என்று ஒன்று நடாத்தப்பட வேண்டுமென தீர்மானிக்குமானால், ஜே. ஆரின் கணிப்புப்படி 80% மான வாக்களிப்போர் எதிராக வாக்களிக்கும் ஒரு நிலையை உருவாக்கியபின்தான் அதை செய்யும் என்பதில் யாருக்கும் சந்தேகம் இல்லை.

காலத்துக்குக் காலம் அரசு எதையாவது அறிவிக்கும் போதெல்லாம் தலையை நிமிர்த்தி எதையாவது கூறிவிட்டு அடங்கி விடும் தமிழ் கட்சிகள், தமிழ் மக்களின் சுயநிர்ணய உரிமை, பாரம்பரிய பிரதேசம் என்பவற்றை அடிக்கடி மறந்து போவதும், முஸ்லீம் மக்களின் அரசியல் அதிகாரத்தை உத்தரவாதம் செய்யும் ஒரு நியாயமான தீர்வை முன்வைக்காதிருப்பதும் நிலவும்

→ 11

# கட்சிகளும் கருத்துக்கணிப்பும்

**-பரந்தாமன்**

கிழக்கில் நடாத்தப்படவுள்ளதாகப் பரவலாகப் பேசப்படும் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு தொடர்பாக அரசியல் கட்சிகளின் கருத்துக்கள் தத்தம் அரசியல் நிலையிலிருந்து வைக்கப்பட்ட கருத்துக்களாக இருக்கின்றதே தவிர வடக்கு - கிழக்கு தமிழ் பேசும் மக்களின் நலன்களிலிருந்து வைக்கப்பட்ட கருத்தாக இல்லை.

தென்னிலங்கைக் கட்சிகளில் ஐ.தே.கட்சியின் கருத்துக்கள் எல்லோரும் அறிந்தவையே. ஐ.தே. கட்சியின் பிரதான அரசியல் நோக்கம் தமிழ் தேசிய இனத்தைக் கூறு போடுவதும் தமிழ் - முஸ்லீம் ஐக்கியத்தை உடைப்பதும் ஆகும். அதற்கேற்ற வகையில் சிங்களக் குடியேற்றங்களை வடக்கையும் கிழக்கையும் இணைக்கின்ற பகுதிகளாக உள்ள திருகோணமலை, வெலிஓயா போன்ற பகுதிகளில் உருவாக்கியும் தமிழ் முஸ்லீம் முரண்பாடுகளை வளர்த்தும் வருகின்றது.

சிறீலங்கா சுதந்திரக் கட்சியைப் பொறுத்தவரை அது கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு பற்றி அண்மைக் காலத்தில் நேரடியாகக் கூறாவிட்டாலும் வடக்கு - கிழக்கை இணைக்கக் கூடாது என்பதில் உறுதியாகவே உள்ளது. இதனூடாக கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பை ஆதரிக்கின்றதென்றே கூறவேண்டும். தற்செயலாகக் கருத்துக் கணிப்பின் முடிவு இணைப்புக்கு ஆதரவாக வந்தாலும் வந்துவிடலாம் எனக் கருதியே கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு தொடர்பாக மௌனம் சாதிக்கின்றது போலத் தெரிகின்றது.

ஜனநாயக ஐக்கிய தேசிய முன்னணிக்கு இது தொடர்பாக தெளிவான கருத்து இல்லை போலத் தெரிகிறது. அதில் உள்ள தலைவர்கள் ஆளுக்கொரு கருத்தினைத் தெரிவிக்கின்றார்கள். அதன் மறைந்த தலைவரான லலித் அத்துலத்முதலி மாகாண சபைத் தேர்தல் கூட்டங்களின் போது, வடக்கு கிழக்கு இணையக் கூடாது என்றும் மக்கள் ஐ.தே.கட்சிக்கு வாக்களித்தால் அது வடக்கு - கிழக்கு இணைப்புக்கு ஆதரவளிப்பதாக இருக்கும் என்று கூறினார். ஆனால் அதன் இன்னோர் தலைவரான காமினி திசநாயக்கா சென்ற வருடம் சரிநிகருக்கு அளித்த பேட்டியில் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பையே தேவையற்றதாக்கும் வகையில் வடக்கு - கிழக்கு இணைந்திருக்க வேண்டுமெனக் கூறினார். காமினி திசநாயக்கா இவ்வாறு கூறினாலும் ஐ.ஐ.தே.முன்னணியின் பெரும்பான்மையானவர்கள் வடக்கு - கிழக்கு இணைப்புக்கு எதிராகவே உள்ளனர்.

முஸ்லீம் கட்சிகளில் முஸ்லீம் காங்கிரஸ் அடிக்கடி குழப்பமான கருத்துக்களை தெரிவித்தாலும் நிபந்தனையுடனான வடக்கு - கிழக்கு இணைப்பை ஆதரிக்கும் ஒரு கட்சியாகவே உள்ளது. நிபந்தனையுடனான வடக்கு - கிழக்கு இணைப்பு முஸ்லீம்களுக்கும் தமது அரசியல் எதிர்காலத்திற்கும் பாதுகாப்பாக இருக்கும் என்பதாலும் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு தமிழ் - முஸ்லீம் மக்களிடையே ஒரு மோதலை உண்டாக்கி இரத்தக் களரியை உருவாக்கக் கூடியது என்பதாலும் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பை எதிர்த்து வருகின்றது.

முஸ்லீம் காங்கிரசிலிருந்து பிரிந்த முஸ்லீம் கட்சியும் ஏறத்தாழ இதே கருத்தையே கொண்டுள்ளது. அது இன்னும் ஒரு படி மேலே சென்று வடக்கு - கிழக்கு இணைந்திருக்கின்றதோ இல்லையோ முஸ்லீம் மக்களுக்கு ஒரு தனியான மாகாண சபை வேண்டும் எனக் கூறுகின்றது.

முற்போக்கு முஸ்லீம் முன்னணி கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு நடாத்தப்பட வேண்டும் என்றும் ஆனால் அதற்கு முன்னர் சிங்களக் குடியேற்றங்கள் அகற்றப்பட வேண்டும் என்றும் கூறுகின்றது. அதன் தலைவரான ரகுமான் இது பற்றிக் கருத்துத் தெரிவிக்கையில் முஸ்லீம்களுக்கு எனத் தனியான மாகாண சபை அவர்களுக்கு பாதுகாப்பாக இருக்காது என்றும் வடக்கு - கிழக்கு இணைந்த மாகாணத்தில் முஸ்லீம்களுக்கென ஒரு நிர்வாகப் பிரிவு உருவாக்கப்பட வேண்டும் என்றும் தெரிவித்தார்.

இடதுசாரிக் கட்சிகள் கருத்துக் கணிப்புத் தொடர்பாக குறிப்பாகக் கூறாவிட்டாலும் வடக்கு - கிழக்கை அங்கீகரிப்பதாகக் கூறியுள்ளன. நவ சமசமாஜ கட்சியைத் தவிர ஏனைய கட்சிகள் ஸ்ரீ.ல.சு. கட்சியுடன் இன்று கூட்டுச் சேர்ந்துள்ளதால் வடக்கு - கிழக்கு இணைப்பு என்ற தங்களுடைய கருத்தை அடக்கியே வாசிக்கின்றன. ந.ச.ச.கட்சி மட்டும் வடக்கு - கிழக்கு இணைக்கப்பட வேண்டும் என உறுதியாகவும் தொடர்ச்சியாகவும் கூறிவருகின்றது.

தமிழ்க் குழுக்கள் அனைத்தும் கருத்துக் கணிப்பு இல்லாமல் வடக்கு - கிழக்கு இணைக்கப்பட வேண்டுமென்றே கூறிவருகின்றன

→ 11

சரிநிகர்

18/2 அலோ சாலை
கொழும்பு - 03
தொலைபேசி: 576704

பிரதம ஆசிரியர்: உ. சேரன்

## மினைக்கெட்டு கூடிப் பேசி....

வடக்கு கிழக்கின் ''தற்காலிக இணைப்பு'' நிரந்தரமாக்கப்பட வேண்டுமா இல்லையா எனத் தீர்மானிக்க கிழக்கில் ஒரு கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பு நடத்தப்பட வேண்டுமென பரிந்துரைத்துள்ளது ''பாராளுமன்ற தெரிவுக்குழு''!

மங்கள முனசிங்க தலைமையிலான இந்தக் குழுவைப்பற்றி எல்லோரும் மறந்து போய் விட்ட நிலையில், தன்னைப்பற்றி நாலுபேர் பேச வேண்டும் என்பதற்காக அறிவித்தது போல இந்த அறிவிப்பை வெளியிட்டது அது.

அது எதிர் பார்த்தது வீண் போகவில்லை.

தெரிவுக்குழு தனது இறுதி முடிவை வெளியிடுவதற்கு சில நாட்களுக்கு முன்பாக அதிலிருந்து வெளியேறிய தமிழ்க் கட்சிகள் உட்பட அனைத்து தமிழர்சார்பு கட்சிகளும் இதை எதிர்த்துள்ளன.

ஈ.பி.டி.பி. கூட விதிவிலக்கில்லாமல் எதிர்த்துள்ளது. முஸ்லிம் கட்சிகளும் கூட இதை ஏகோபித்து வரவேற்றுவிடவில்லை.

வடக்கு கிழக்கு மாகாணங்கள் இணைக்கப்படுவது பற்றி கிழக்கு மாகாண மக்களின் அபிப்பிராயத்தை அறிவதில் இந்தத் தெரிவுக்குழுவுக்கு உள்ள அக்கறை எம்மைப் பிரமிக்க வைக்கிறது. கிழக்கு மாகாண மக்களின் ஜனநாயக உரிமை மீது இவர்களுக்கு உள்ள மதிப்பை யாரும் பாராட்டாமல் இருந்து விட முடியாது.

ஆனால் இதுபற்றி வடக்குமாகாண மக்களின் அபிப்பிராயம் கேட்கப்படத் தேவையில்லையா? அல்லது அவர்களுக்கு ஜனநாயகம் கிடையாதா?

அல்லது மாகாண இணைப்புக் கோரிக்கை வெறும் வடக்கு மாகாண மக்களின் ஆக்கிரமிப்பு மனோபாவத்தால் எழுந்த கோரிக்கை என்று தெரிவுக்குழு கருதுகிறதா?

வடக்கு கிழக்கு இணைப்பு கோரிக்கையின் பின்னால்- தமிழ் பேசும் மக்களின் தாயகக் கோரிக்கைக்கு பின்னால் -ஒரு அரசியல் உரிமைக்குரல் இருப்பது அதற்குப் புரியவில்லையா?

அல்லது சிங்கள பௌத்த பேரினவாதத்தின் கடந்த கால திட்டமிட்ட குடியேற்றங்கள் தமிழ் பேசும் மக்களின் பாரம்பரிய பிரதேசத்தை துண்டாடச் செய்யப்பட்ட சதிகள் என்பதை அவர்கள் புரிந்து கொள்ள மாட்டார்கள் என்று நினைக்கிறதா?

பாவம், மங்கள முனசிங்க,நீங்கள்.

கண்மூடிப் பால் குடிக்கும் பூனையாக நீங்களும் உங்கள் தெரிவுக்குழுவும்...

ஆனால் இந்தப் பாவனைகள் எத்தனை நாளைக்கு தாக்குப் பிடிக்கப் போகின்றன?

உங்களிடம் ஒரு கேள்வி கேட்க தோன்றுகின்றது.

இதை சொல்லத்தான் இத்தனை நாள் ''மினைக்கெட்டு'' கூடிக்கூடிப் பேசினீர்களா? யாருக்கு எது புரியவில்லை என்று நீங்கள் நினைத்தாலும் தமிழ் பேசும் மக்களுக்கு ஒன்று தெளிவாகத் தெரியும்:

கிழக்கில் மட்டும் தேர்தலை நடாத்தி தமிழ் முஸ்லீம்மக்களது உறவில் தற்போது ஏற்பட்டுள்ள விரிசலை பயன்படுத்தி, இணைப்பு வேண்டாம் என்ற முடிவை பெற்றுவிடுவதன் மூலம் உங்களது சட்டத்தில் உங்களது பாரம்பரிய பிரதேச அழிப்பை நியாயப்படுத்தி விடலாம் என்று கருதுகிறீர்கள்.

நீங்களே தேர்தலை நடத்தி நீங்களே அறிவிக்கப் போகிற தீர்வுக்கு கிழக்கு மாகாண மக்களை சாட்சிக்கு அழைக்க விரும்புகிறீர்கள். ஆனால் உங்கள் நோக்கம் பலிக்கப் போவதில்லை. ஏனென்றால் இது ஒரு தேசத்தின் அரசியல் கோரிக்கை.

உங்களுக்கு ஒரு சவால் விடுகின்றோம்:

உண்மையிலேயே உங்களுக்கு உங்களது கருத்துக்கணிப்பு வாக்கெடுப்பு ஜனநாயகத்தில் நம்பிக்கை இருந்தால் வடக்கு கிழக்கு அந்த மாகாண மக்களின் பாரம்பரிய பிரதேசம் என்பது பற்றிய அவர்களது அபிப்பிராயத்தை அறிய வாக்கெடுப்பை நடாத்திப் பாருங்கள். சிறிலங்காவுடன் அவர்கள் நீங்கள் விரும்பும் ''ஒற்றை ஆட்சியின் கீழ் '' வாழ விரும்புகிறார்களா என்று வாக்கெடுப்பு நடாத்திப் பாருங்கள்.

அப்போதுதான் உங்களுக்குப் புரியும்.


அவர்கள் காதில் நீங்கள் வைக்க விரும்பும் பூவைப்பற்றி
அவர்கள் தெளிவாகவே தெரிந்து வைத்திருக்கிறார்கள் என்று!

நன்றி - நூலகத்திட்டம்





# அவரும் ——— இவரும் கொஞ்சம் கேள்விகளும்



முன்னாள் பிரதிப் பொலிஸ் மா அதிபர் ஜூன் 18 ம் திகதி நாடு திரும்பியிருக்கிறார்.
சென்னையிலிருந்து விமானம் மூலம் நாடு திரும்பிய இவர் கைது செய்யப்படுவார் என எதிர்பார்க்கப்பட்ட போதும் அவ்வாறெதுவும் நடக்கவில்லை. மிகச் சாதாரணமாக வந்திறங்கியிருக்கிறார்.

இலங்கையின் பிரேமதாச அரசுக் காலத்தில் ''அரசின் மீது அவதூறு பரப்பினார்'' என்று குற்றஞ்சாட்டப்பட்டு தேடப்பட்டவர். 88,89 காலப்பகுதியில் அரசின் ஜே.வி.பி. ஒழிப்பின் போது ஆயிரக்கணக்கில் இளைஞர்கள் காணாமல் போயினர். இது தொடர்பாக மனித உரிமை அமைப்புகளினால் அரசின் மேல் மேற்கொள்ளப்பட்ட நெருக்குதலையடுத்து உடுகம் பொல விசாரணைக்குள்ளாக்கப் பட்டார்.
இளைஞர்கள் காணாமல் போனதற்கும் தனக்கும் எதுவித தொடர்புமில்லை என்றும், அரசின் கறுப்புப் பூனைகளே அவற்றைச் செய்தார்கள் என்றும் உடுகம்பொல தெரிவித்தார். இதனையடுத்து அரசு உடுகம்பொல மீது பிடிவிறாந்து உத்தரவைப் பிறப்பித்தது. நாட்டை விட்டு அவர் வெளியேறாதவாறு தடை விதித்திருந்தது.
இவர் தேடப்பட்ட காலத்தில் சென்ற வருடம் ஜூன், ஜூலையில் இவரது சத்தியக் கடதாசி ஒன்றையும், பேட்டி ஒன்றையும் வெளியிட்டது தொடர்பாக யுக்திய, அத்த போன்ற பத்திரிகைகளுக்கெதிராக அரசு வழக்குத் தொடுத்திருந்தது.
ஆசிரிய பீடத்தைச் சேர்ந்தவர்கள் இரகசியப் பொலிஸாரினால் விசாரணைக்குள்ளாக்கப்பட்டனர். அவருடைய இருப்பிடத்தைக் கண்டுபிடித்து அவரைக் கைது செய்வது அரசுக்கு முக்கியமானதாக இருந்தது.
ஆனால் அரசால் அப்போது அவரைக் கைது செய்ய முடியவில்லை.
இப்போது சென்னையிலிருந்து வந்திருக்கிறார்; விமான மூலம். நாட்டை விட்டு வெளியேறுவது தடைசெய்யப்பட்டிருந்த போதும் அவர் எப்படி வெளியேறினார்? என்கிறது கேள்வி. சென்னைக்கு அவர் சென்றதற்கான விசாவோ, வேறு எந்த தஸ்தாவேஜுகளோ அவரிடமிருக்கவில்லை. சென்னை விமான நிலையத்தில் இந்தச் சிக்கல் எழுந்திருக்கிறது. என்றாலும் இலங்கை - இந்திய ராஜரீக உறவுகளின் அடிப்படையில் இது தீர்க்கப் பட்டிருக்கிறது. உடுகம்பொல வந்திறங்கியிருக்கிறார்; மறைந்து வாழ்ந்து விட்டு.

புதிய ஜனாதிபதியைச் சந்தித்துப் பேசினாராம். ஆக, அரசின் மீது படுகொலைக் குற்றச்சாட்டைச் சுமத்தியதால், அரசின் மீது அவதூறு பரப்பியதாகக் கூறப்பட்டு பகிரங்க பிடிவிறாந்து பிறப்பிக்கப் பட்ட உடுகம்பொல சென்னையில் மறைந்திருந்து விட்டு இப்போது நாடு திரும்பியிருக்கிறார். அரசு அவரைக் கைது செய்யவுமில்லை. சிறையில் அடைக்கவுமில்லை. நீதிமன்றம் பிணை வழங்கியுள்ளது. வழக்குத் தொடருமாம்.

சந்திரசேகரன்,
கைது செய்யப்பட்டு ஏறத்தாழ இரண்டு வருடங்கள். கூடவே மலையக மக்கள் முன்னணியைச் சேர்ந்த காதரும், தர்மலிங்கமும் கைதானார்கள்.
கூட்டுப்படைத் தலைமையக குண்டு வெடிப்பில் சம்பந்தப்பட்டவரதனுக்கு உதவினர் என்ற சந்தேகத்தின் பேரில் கைதாயினர்.
குற்றப் பத்திரம் தாக்கல் செய்யப்பட வேண்டும் அல்லது விடுவிக்கப்பட வேண்டும் எனத் தெரிவிக்கப்பட்ட பின்னரும் விசேட உத்தரவின் பேரில் சந்திரசேகரன் தடுத்து வைக்கப்பட்டுள்ளார்.
இவர் நடந்து முடிந்த மாகாண சபைத் தேர்தலில் நுவரெலியா மாவட்டத்தில் போட்டியிட்டுத் தெரிவானவர். மாகாண சபையில் பதவிப் பிரமாணம் செய்ய அனுமதி மறுக்கப்பட்டுள்ளது சந்திரசேகரனுக்கு.

கொஞ்சம் கேள்விகள் :

1. அரசினால் பகிரங்கப் பிடிவிறாந்து பிறப்பிக்கப்பட்டு நாட்டை விட்டு வெளியேறத் தடை செய்யப்பட்டவர் வெளியேறியது எப்படி?
2. வெளியேறியதற்கான எந்தவிதமான தஸ்தாவேஜுக்களும் இல்லாதவர் திரும்பி வர அனுமதிக்கப்பட்டது எப்படி?
3. வந்திறங்கிய அவர் கைது செய்யப்படாதது எப்படி?
4. பிணையில் விடப்பட்டது எப்படி?


இவ்வளவிற்குமப்பால் உடுகம்பொல பிணையில் விடப்படலாமென்றால் சந்திரசேகரன் இதுவரை பிணையில் விடப்படாதது ஏன்?

1. ஒரு தமிழன் என்பதாலா?
2. இ.தொ.காவுக்கு எதிரானவர் என்பதாலா?
3. மக்களால் தெரிவு செய்யப்பட்டவர் என்பதாலா?

# அமெரிக்காவின்.....

கொண்ட நாடுகளின் தனி மேலாதிக்கத்தை (mono poly) பாதுகாக்கவென கொள்ளப்பட்ட ஒரு முயற்சியே அன்றி மனிதத்துவத்தின் மீதான அக்கறையுடன் உருவாக்கப்பட்ட ஒன்றல்ல.
இந்த சர்வதேச அணுசக்தி அமைப்பு ஒரு போதும் அமெரிக்கா, ரஷ்யா, ஜப்பான் போன்ற நாடுகளின் அணுவாயுத முயற்சிகள் எந்தளவில் உள்ளன என்று அறியவும், உலக மக்களுக்கு அறிவிக்கவும், அவர்களின் தளங்களைப் பரிசீலிக்கவும் ஒருபோதும் முயன்றதில்லை.
இதில் வேடிக்கை என்னவென்றால் சர்வதேச அணுசக்தி அமைப்பிலிருந்து அனுப்பப்பட்ட நிபுணத்துவம் வாய்ந்த பரிசோதகர்கள் பலதடவைகள் வட கொரியாவின் புளூட்டேனியம் ( அணுவாயுதத் தயாரிப்புக்கான பிரதான மூலப் பொருள் ) பற்றிய சகல தகவல்களையும் ஆராய்ந்த பின்னரும் அங்கு எதுவும் 'தவறாக' பயன்படுத்தவில்லை என்றே முதலில் அறிவித்தனர். ஆனால் அமெரிக்காவினதும் ஜப்பானினதும் உளவாளிகளது கூற்றின் பின்னர் தம்முடைய கணிப்புக்கும், வட கொரியாவின் பதிவுகளுக்கும் இடையில் முரண்பாடு இருப்பதாகக் கூறி வருகின்றனர். இந்த விபரங்களை மறுக்கும் வட கொரியா, தமது பதிவுகளின் தவறை சுட்டிக் காட்டும் படியும் அல்லது சர்வதேச அணுசக்தி அமைப்பு நிபுணர்கள் எவ்வாறு செய்தார்கள் என்று விளக்கும் படியும் கேட்கும் போது சர்வதேச அணுசக்தி அமைப்பு மௌனம் சாதிக்கிறது.
இத்துடன் இன்னொரு சுவையான தகவலையும் சேர்த்துக் கொள்ளலாம்.
மேற்கின் வால்பிடி அரசான நிறவெறித் தென்னாபிரிக்காவில் பரிசீலனை செய்த பின் அங்கு எந்தவிதமான அணுஆயுத முயற்சிகளும் இல்லை என்று இந்த சர்வதேச அணுசக்தி அமைப்பு அறிவித்தது. ஆனால் தென்னாபிரிக்கத் தலைவர் டி கிளார்க் அண்மையில் அறிவித்துள்ள தகவல் ஒன்றின் படி ''தென்னாபிரிக்கா சில அணு ஆயுதங்களை உற்பத்தி செய்துள்ளது. ஆனால் அவை அழிக்கப்பட உள்ளன!'' என்று தெரிவித்துள்ளார்.
அமெரிக்காவின் அனைத்தின் மீதான ஆதிக்கம் சிறிய நாடுகளை விழுங்குகின்ற அதன் இரத்தவெறி பிடித்த செயல்களுக்கு போடப்படும் ஜனநாயக வேஷம் என்பன எவ்வளவு காலம்தான் நின்று பிடிக்கப் போகிறதோ?

-தகவல்
Third World Network.



ஜூன் 22: இன்றைய காலைப் பத்திரிகையில் விமான நிலையத்தில் வந்திறங்கிய ஐந்து பொலிசாரின் படங்களும் செய்திகளும் வெளியாகியிருந்தன.
90 இல் ஆரம்பமான யுத்தத்தின் போது கைதானவர்கள். மூன்று வருடங்கள் புலிகளின் சிறையிலிருந்திருக்கிறார்கள் யுத்தக் கைதிகளாக.
அரசு தங்களுடைய விடுதலையில் அக்கறை கொள்ளவில்லை என்று கூறி சாகும்வரை உண்ணாவிரதத்தை ஆரம்பித்தார்கள். விளைவு; அரசு - புலிகள் பேசியதில் விடுதலையாகி இருக்கிறார்கள். அரசு வடக்கிற்கு தடை செய்யப்பட்டிருந்த பொருட்களைக் கொடுத்து இவர்களை எடுத்திருக்கிறது.
பொலிஸாருக்காகப் பேச அரசும், கொடுக்க எரிபொருட்களும் இருந்தது.
84 இல் சாகும் வரை உண்ணாவிரதமிருந்த பல்கலைக் கழக மாணவர்களைக் கடத்திக் கொண்டு போன புலிகள், 93 இல் சாகும் வரை உண்ணாவிரதமிருந்த பொலிசாரை விடுதலை செய்திருப்பது வரவேற்கப் படவேண்டிய நல்ல விடயம் தான் என்று புலிவால் புத்திசீவிக் குஞ்சுகள் சொல்லக் கூடும்.
அந்த வரையில் சரிதான்.
ஆனால் யுத்தத்தின் போது எதிரிப்படையினரைக் கைது செய்வதும், பின்னர் தமக்குத் தேவையானவற்றிற்காக அவர்களை வைத்துப் பேரம் பேசுவதும் பெற்றுக் கொள்வதும் ஒன்றும் புதுமையான விடயங்களல்ல.
இதை வைத்து புலிகளின் ஜனநாயகம், மனிதாபிமானம் பற்றி சிலாகிக்கும் போதுதான் இந்தப் புத்திசீவிகளின் புத்தியைப் பற்றி ஐயம் கொள்ள வேண்டியிருக்கிறது.
புலிகளின் சிறையிருந்து இந்தப் பொலிஸார் விடுதலை செய்யப்பட்டிருப்பது புலிகளின் மனிதத்துவத்தின் மீதான அக்கறையைக் காட்டுகிறது என்றால் அதே நேரம் அவர்களது சிறையில் இருக்கும் ஆயிரக்கணக்கானவர்களைப் பற்றி என்ன சொல்லப்போகிறார்கள்?
தோழி சஞ்சிகை ஆசிரியராகவிருந்த செல்வி முதல் புதியதோர் உலகம் நாவலாசிரியரான டொமினிக் வரை நினைவில் வந்து போகும் இப்பட்டியல் மிக நீளம்.
செல்வி, மனோ, தில்லை - தில்லைக்குத் தான் தாம் மரணதண்டனை வழங்கிவிட்டதாகப் போன மாதம் சொல்லி விட்டார்களே.- டொமினிக், ரமணி, அன்ரன் என்று தெரிந்தவர்களும், தெரியாதவர்களுமாய் ஆயிரக்கணக்கானவர் சிறையில்.

செல்வி.
ஒரு கவிஞர், ஒரு பெண்நிலைவாதி, யாழ் பல்கலைக் கழக மாணவி. 91 ஓகஸ்ட்டில் கைது செய்தார்கள்:
தில்லைநாதன்
வவுனியா மாவட்டப் பாடசாலை ஒன்றின் ஆசிரியர், முன்னாள் யாழ் பல்கலைக் கழக மாணவர். 'புலி மரபில் வந்த வீரமறவர்கள்' டொலர் சேர்க்க கனடா பறக்க, இவர் வவுனியாவின் பின்தங்கிய கிராமமொன்றின் பாடசாலைக்கு வந்தவர்.
''தில்லை இப்போது இல்லை'' என்கிறார்கள்.
டொமினிக்
மலையகத்திலிருந்து ஆறோ, ஏழு இதழ்கள் மட்டுமே வந்த 'தீர்த்தக்கரை' ஆசிரியர்களுள் ஒருவர். பின்னர் புளொட்டில் இருந்தவர். விடுதலையின் பேரால் நடந்த அக்கிரமங்களைக் கண்டு சினந்ததால், புளொட்டிலிருந்து வெளியேறி அதனை வெளிச்சத்துக்குக் கொண்டுவரும் வகையில் ''புதியதோர் உலகம்'' எனும் நாவலைப் படைத்தவர். 91 மே 17 இல் கைதானார்.
ரமணி
என்.எல்.எப்.ரி அமைப்பைச் சேர்ந்தவர் என்று கருதப்பட்டதால் கைது செய்யப்பட்டவர்.
அன்ரன்
பி.எல்.எப்.ரி. அமைப்பைச் சேர்ந்தவர் என்று கருதப்பட்டதால் கைது செய்யப்பட்டவர்.
இப்படி நீள்கிற இந்தப் பட்டியலுக்கு - இந்தக் கைதுகளுக்கு என்ன காரணம் என்கிறீர்களா?
கொழும்பில் கைது செய்வதுக்கு தமிழன் என்பதே எப்படிப் போதுமானதோ, அதேபோல் அங்கே ''துரோகி'' என்ற வார்த்தை போதும்.
புலிகளுக்கு சார்பற்ற, அவர்களின் நலன்களுக்குப் பாதகமான - கவனிக்க: தமிழ் மக்களின் நலன்களுக்குப் பாதகமான அல்ல - யாரும் துரோகிகள்.. எதுவும் துரோகம்.
அதிகம் அழுத்த வெடிப்பு நிகழும். இது விஞ்ஞான விதி.
புலிகளுக்கு எஞ்ஞானமும் இல்லாதிருக்கலாம்.
ஆனால் விஞ்ஞானம் பிழைக்காதே.

நன்றி - நூலகத்திட்டம்



# தேசிய விடுதலைப் போராட்டம் ஓர் மீளாய்வை நோக்கி.... 16

1977 இல் தோற்றம் பெற்ற மனிதன் இயக்கம் தமிழ்த் தேசத்தின் பொருளாதாரம், தமிழ்த் தேசத்தின் அரசியல் என்பவை தொடர்பாக மட்டுமல்ல தமிழ்த் தேசத்தை ஆய்வுக்கு உட்படுத்தல் என்பதிலும் அதிக அக்கறை செலுத்தியது. சில கிராமங்களை மாதிரியாகத் தெரிவு செய்து அக் கிராமங்களில் சமூக பொருளாதார ஆய்வுகளைச் செய்து கிராமத்தின் பிரச்சினைகளை வெளிக்கொணர்ந்ததன் மூலம் அக் கிராமங்களில் சமூக நிறுவனங்கள் சீர்திருத்தப் பணிகளை மேற்கொள்வதற்கும் அரசியல் நிறுவனங்கள் அரசியல் வேலைகளைச் செய்வதற்கும் உதவி புரிந்தது. இவ்வாறான ஆய்வுகள் யாழ்ப்பாண மாவட்டத்தின் நகர்ப் பகுதியிலுள்ள திட்டி எனும்

## நீதிதான் செத்ததா? - பாழும் சாதி தான் வென்றதா?

சேரிக் கிராமத்திலும், வவுனியா மாவட்டத்தில் இளமருதங்குளத்திலும், மலையகத்திலும் மேற்கொள்ளப்பட்டது. திட்டியில் இவர்கள் செய்த ஆய்வின் பின்னரே சமூக நிறுவனங்களால் பல சீர்திருத்த முயற்சிகள் மேற்கொள்ளப்பட்டன. தமிழ் மகளிர் பேரவை அங்குள்ள பெண்களின் வேலை வாய்ப்புப் பிரச்சினையைத் தீர்ப்பதற்கு தும்புத் தொழிற்சாலை ஒன்றையும் நிறுவியிருந்தது. சீர்திருத்த வேலைகள் அதிகளவிற்கு உடனடியாக ஏற்படாவிட்டாலும் எவ் வேலையையும் ஆய்வின் அடிப்படையில் மேற்கொள்ள வேண்டும் என்ற சிந்தனை அரசியல் வேலை செய்பவர்கள் மத்தியிலும் சமூக வேலை செய்பவர்கள் மத்தியிலும் தோற்றம் பெறுவதற்கு மனிதன் இயக்கத்தின் முயற்சியே காரணமாக அமைந்தது. காந்தீயம், மனித முன்னேற்ற நடு நிலையம், போன்ற சமூக நிறுவனங்களும், ஈ.பி.ஆர்.எல்.எவ் போன்ற அரசியல் இயக்கங்களும் தமது வேலைகளை கிராமங்களில் ஆரம்பிப்பதற்கு முன்னர் இவ் ஆய்வு வேலைகளில் முதலில் ஈடுபட்டன. காந்தீயம் வவுனியா மாவட்டத்தில் கூளாங்குளம், கணேசபுரம் போன்ற பகுதிகளிலும் மனித முன்னேற்ற நடுநிலையம் சிறுப்பிட்டி கிராமத்திலும், ஈ.பி.ஆர்.எல்.எவ் இன் தொழிற் சங்கமான கிராமிய தொழிலாளர் சங்கம் மயிலங்காடு, புன்னாலைக்கட்டுவன் போன்ற கிராமங்களிலும் இவ் வகையான ஆய்வு வேலைகளில் ஈடுபட்டன.

திட்டி, இளமருதங்குளம் சம்பந்தமான ஆய்வுகள் மனிதன் பத்திரிகையிலும் வெளிவந்தன. அதுவும் திட்டி ஆய்வு மனிதன் பத்திரிகைக்குப் புறம்பாக நூல் வடிவிலும் மனிதன் இயக்கத்தினால் வெளியிடப்பட்டது. இவ் வாய்வு முயற்சிகளை மனிதன் இயக்கத்தைச் சேர்ந்த விமலதாசனே பொறுப்பேற்று மேற்கொண்டிருந்தார்.

ஆய்வு முயற்சிகளுக்குப் புறம்பாக தமிழ் மாவட்டங்களில் பின்தங்கிய பிரதேசங்களில் கல்வியை வளம்படுத்தும் வகையில் '' மனிதன் கல்விச் சேவை '' என்ற பெயரில் ஒரு கல்விச் சேவையையும் மனிதன் இயக்கம் நடாத்தியது. பின்தங்கிய பகுதிகளில் க.பொ.த (உயர்தரம்), க.பொ.த (சாதாரணம்) எடுக்கின்ற மாணவர்களுக்காக பல்கலைக் கழக மாணவர்களைக் கொண்டு பாடக் குறிப்புகளை தயாரித்து வெளியிட்டதோடு மன்னார் போன்ற மாவட்டங்களில் பல்கலைக் கழக மாணவர்களைக் கொண்டு இலவசமாக கருத்தரங்குகளையும் நடாத்தியது. இக் கல்விச் சேவை மன்னார் போன்ற பின்தங்கிய மாவட்டங்களில் விஞ்ஞான பாடங்களுக்கு ஆசிரியரே இல்லாமல் தத்தளித்த மாணவர்களுக்கு ஒரு வரப்பிரசாதமாக அமைந்தது. அத்தோடு பிரதேச வேறுபாடுகளுக்கு அப்பால் தமிழ் மாணவர்கள் என்ற வகையில் அவர்களை இணைப்பதற்கும் வழிகோலியது.

மனிதன் இயக்கம் மேற்கொண்ட பணிகளில் இன்னோர் சிறப்பான பணி அகதிகள் குடியேற்றமாகும். 1977 இனக் கலவரத்தில் அகதிகளாக வந்த மலையக மக்களையே தமிழ்ப் பிரதேசத்தில் இவ்வாறு குடியேற்றினார்கள். வவுனியாவில் குருவிமடு என்ற இடத்தில் இவ்வாறான குடியேற்றத்தை இவர்கள் மேற்கொண்டிருந்தார்கள்.

மேற்குறிப்பிட்ட பணிகளை விட சாதி ஒடுக்கு முறைக்கு எதிரான நடவடிக்கைகளிலும் மனிதன் இயக்கம் அதிக கவனம் செலுத்தியிருந்தது. மீசாலையில் சாதிப்பிரச்சினை காரணமாக சாதியால் ஒடுக்கப்பட்ட ஒருவரை பனையில் மரமேறிக் கொண்டிருந்த போது பனையோடு தறித்து வீழ்த்தி சாதி வெறியர்கள் கொலை செய்த போது '' நீதிதான் செத்ததா ? ப்பாழும் சாதி தான் வென்றதா ? என மனிதன் பத்திரிகையில் தலைப்புச் செய்தியிட்டு கண்டனம் தெரிவித்தது. இதே போன்று கைதடியில் நடைபெற்ற சாதிக் கலவரத்தையும் கண்டித்து செய்திக் கட்டுரை ஒன்றை வெளியிட்டிருந்தது. கைதடிப் பிரச்சினை தொடர்பாக அறவழிப் போராட்டக் குழு கரிநாள் போராட்டத்தினை நடாத்தியபோது தானும் அப் போராட்டத்தில் கலந்து கொண்டது. இதைவிட யாழ்குடாநாட்டில் சாதியால் ஒடுக்கப்பட்ட மக்களுக்கு திறந்துவிடப்படாத ஆலயங்களின் பட்டியலையும் குறிப்பிட்டு ஆலயங்கள் அனைவருக்கும் திறந்து விடப்பட வேண்டும் என வற்புறுத்தியது.

தொடர்ந்து 1979ம் ஆண்டு இனங்களுக்கிடையே நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கம் (மோர்ஜ்) தோற்றம் பெற்ற போது அதனுடன் இணைந்து தமிழ் மக்களின் பிரச்சினையை சிங்கள மக்கள் மத்தியில் எடுத்துக் கூறுவதற்கான முயற்சிகளையும் மேற் கொண்டது. மனிதன் இயக்கத்தின் ஸ்தாபகர்களில் ஒருவரான ஜெயசீலன் அடிகள் மோர்ஜ் இயக்கத்தின் வட பிரதேச செயலாளராகத் தெரிவு செய்யப்பட்டார். மனிதன் பத்திரிகையின் பிரதம ஆசிரியராக இருந்த விமலதாசனும் மோர்ஜ் இயக்கத்தின் முக்கிய உறுப்பினரானார். மோர்ஜ் இயக்கத்தின் பணிகளில் மனிதன் இயக்கத்தைச் சேர்ந்த முக்கியமானவர்கள் தீவிரமாக ஈடுபட்ட படியால் பிற்காலத்தில் மனிதன் இயக்க வேலைகளைக் குறைத்தனர். இதனால் 1980களின் ஆரம்பத்தில் மனிதன் இயக்க வேலைகள் குறைய ஆரம்பித்து 1983ம் ஆண்டு ஜூலையில் மனிதன் ஆசிரியர் விமலதாசன் இராணுவத்தினரால் சுட்டுக் கொல்லப்பட்டதோடு முற்றாகவே நின்று விட்டது எனலாம்.

மனிதன் இயக்கம் இவ்வாறான பணிகளை மேற் கொண்ட போதும் அது தன்னுள்ளே பல குறைபாடுகளைக் கொண்டிருந்தது. இக் குறைபாடுகளில் மிக முக்கியமானது அவ்வியக்கம் தன்னை ஒரு அரசியல் இயக்கமாக வளர்க்காமை ஆகும். ஆரம்பத்தில் அரசியல் இயக்கமாக வளர்ப்பதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்பட்ட போதும் பிற்காலத்தில் அதனை முழுமையாக கைவிட்டமையால் அது ஒரு சீர்திருத்த இயக்கமாக மட்டும் இருந்தது. இதனால் ஆரம்பத்தில் மிக ஆர்வத்துடன் செயற்பட்ட பலர் இவ் இயக்கத்திலிருந்து விலகி அரசியல் இயக்கங்களில் சேர்ந்து கொண்டனர். பாலநடராஜ ஐயர், ஜெகநாதன், ஜோதிலிங்கம் ஆகி

**அன்ன பூரணா**

யோர் இவ்வாறு சேர்ந்து கொண்டவர்களாவர். உண்மையில் முன்னைய தமிழ் ஈழ விடுதலை இயக்கம் சிதைந்த போது அது முன் வைத்த அரசியல் பாதையின் அடிப்படையில் முன்னேறிய இயக்கமாக மனிதன் இயக்கம் வளரும் என எதிர்பார்க்கப்பட்டது. ஆனால் அது நடைமுறையில் ஒரு சீர்திருத்த இயக்கமாக மட்டும் தொழிற்பட்டு இன்னோர் சீர்திருத்த இயக்கமான மோர்ஜ் உடன் தன்னை சங்கமமாக்கிக்கொண்டது.

மனிதன் இயக்கத்திலிருந்த இன்னோர் குறைபாடு கத்தோலிக்க மதத்தின் ஆதிக்கம் அங்கு அதிகமாக இருந்தமை ஆகும். இயக்கம் தன்னுடைய பத்திரிகை வேலைக

→ 11

# விமலேஸ் நினைவேடு

**- மாதவன்**



83 என்று நினைக்கின்றேன். யூலைக் கலவரத்திற்கு முன்னரேயே அவரைச் சந்தித்து விட்டேன். பல்கலைக்கழகத்தில் முதலாம் வருட மாணவன். பல்கலைக் கழகத்தை இடையிடை சும்மா எட்டிப்பார்கிறவன் நான்.

எவ்வாறோ, பழக்கம் நெருங்கி விட்டது. எது எம்மை இணைத்தது? நெஞ்சிலே வஞ்சகம் இல்லாதவன்- அதுதானோ?

அரசியலில் அவன் கொண்ட ஆர்வம் -அதுவுமோ? ''மைச்சான்'' இதுதான் அவன் அழைப்பு. தோழமை தொனிக்கும். ''தோழர்'' கட்டளைத் தொனியில் கத்துகிற கம்யூனிஸ்ட்டுகளை நான் கண்டிருக்கின்றேன். மண்வாசனை வீசுகிற மைச்சானில், எத்தனை குழைவு, எத்தனை அன்பு, எத்தனை பிணைப்பு.

கண்ணாடியும், கறுத்துமெலிந்தும். முகத்தில் தாடியும், புன்முறுவலுமாக சைக்கிளில் தூரத்தில் தெரிபுவன் யார்? அட நம்ம விமலேஸ்.

விமலேஸின் வீட்டை நான் கண்டிருக்கின்றேன். தலை நரைத்துப் போன கிழவனைப் போல கொட்டில், அதில் அவன் அம்மா, அப்பா, தங்கை. நலிந்து போன அவன் குடும்பம். பூநகரியில் நாலாம்கட்டை இராணுவ முகாமைத் தாண்டி அவன் குடில். ஆதலினால், சங்குப்பிட்டி கழிந்து மட்டுவில் நாட்டினுள் வயல் வரம்பினில் சைக்கிளைச் செலுத்தினால், இராணுவத்தை எதிர்ப்படாது, அவன் வீட்டை எதிர்ப்படலாம். ''தம்பி'' சுருக்கம் விழுந்த முகத்துடன் தாய் சிரிப்பார்.. ''அம்மா இவன் என்ரை... '' அம்மா விளங்கிச் சிரிப்பார்.

தமிழீழ மக்கள் விடுதலைக் கழகத்துட்ன் அவன் வேலை செய்த காலங்களில் அவன் திருப்தியுடன் இருந்தான். அதிருப்திப்பட்டு வெளியேறிய போதும், தமிழீழ மக்களுடன் வேலை செய்தான்.

ஆத்மதிருப்திக்காக , யாழ்பல்கலைக் கழககலாச்சாரக் குழுவுடன் இணைந்து **'மண் சுமந்த மேனியர்'** நாடகத்தில் நடித்தான். அவன் சந்தோஷமாக இருந்த காலம்.

விமலேஸிடம் ஒரு நீல ரீசேட் இருந்தது. அது ஒன்றுதான் இருந்தது. நீல நிற சேர்ட்டுடன் தென்பட்டால், அது விமலேஸ்.

அகதிகள் புனர்வாழ்வுக் கழகத்தால் கிளிநொச்சி ஊற்றுப்புலத்தில் அகதிகள் குடியேற்றப்பட்டார்கள். விமலேஸ் யாழ்ப்பாணத்தில் பழைய உடுப்புகள் நிறையச் சேர்த்து, கிளிநொச்சி முறிப்புக்குளத்தில் அவற்றைத் தோய்த்து, காய வைத்துஅகதிகளுக்கு கொடுத்தான். அப்பொழுது சில சமயங்களில் முறிப்புக் குளத்தில் நான் நீந்தினேன். இரவில் நித்திரை கொள்கையில் ''நாரி உழையுது'' என்பான்.

1986 இன் இறுதி. விமலேஸுக்கு பல்கலைக் கழகம் இறுதி வருடம். பல்கலைக் கழக மாணவன் விஜிதரன் கடத்தப்பட்டான். பல்கலைக்கழகம் சுறுசுறுப்படைந்தது. சுறுசுறுப்பை நான் மதிலால் எட்டிப்பார்த்தேன். விஜிதரனை விடுதலை செய்யக் கோரி மாணவர்கள் உண்ணாவிரதம் இருந்தார்கள். விமலேஸ் உண்ணாவிரதம் இருந்தான். அப்போது அவனைப் பார்த்த ஞாபகம். ஏற்கனவே மெலிந்தவன். இன்னும் மெலிந்தான்.

1986 டிசம்பர் 13. அன்று ஈ.பி.ஆர்.எல்.எவ் இயக்கம் புலிகளினால் தடை செய்யப்பட்டது. அன்றைக்குப் பிறகு, கண்ணாடியைக் காணவில்லை; நீல ரீ சேர்ட்டைக் காணவில்லை; கறுத்து மெலிந்த விமலேஸைக் காணவில்லை. நான் அவனை மறக்கவில்லை. மறக்கக் கூடியவனா அவன்?

நிறைய நாட்கள் கழிந்து விட்டன. இந்திய அமைதிப் படை வந்து மக்கள் அழிந்து ஊர்ஊராக சிதறியிருந்த நேரம். 1988 பெப்பிரவரியில் விமலேசைக் கண்டேன். உடை மாறியிருந்தது. ரீ சேட் தான் . வேறு நிறம். ''சிவரஞ்சித் தந்தது'' என்றான்.

இடைப்பட்ட காலத்தில் அவன் யாது செய்தான் ?

புலிகளுக்கு அஞ்சி மறைந்து தான் வாழ்ந்தான். மிகப் பின் தங்கிய கிராமத்தில், சாதாரண குடிமகனாகத் தோட்டம் கொத்தினான். இரவில் சிறார்களுக்குக் கல்வி போதித்தான். அது சந்தோஷமே; நிறைவே.

''புலிகளால் பிரச்சினை இல்லையா?'' கேட்டபோது, '' இல்லை, பொது மன்னிப்பு வழங்கிய மாதிரி'' என்று சொன்னான். ''காசு தான் பிரச்சினை''.

இறுதிக் காலங்களில் பொருளாதாரம் மிகப் பிரச்சினையாக இருந்தது. விமலேஸ் ஓடித் திரிந்தான். ஒரு ரியூட்டறிக்கு பரீட்சை விடைத்தாள் திருத்திக் கொடுத்து ஒன்றுக்கு நாற்பது சதம் வாங்கினான். சாப்பாட்டு நேரத்தைக் குறைத்தான்.

1988 யூலை 18. அந்த நாள் ஞாபகமிருக்கிறது. மாலை 5.00 மணிக்கு வருவான். காத்திருக்கிறேன். முதநாள் பின்னேரம் சொன்னான். அவன் வேலை தொடர்பாக ஒருவரைச் சந்திக்கச் செல்ல வேண்டும்.

ஆறு மணியாகிறது. வருவான். காத்திருக்கிறேன். ''மச்சான், இடையிலை அவனைச் சந்திச்சிட்டன். அதுதான் கதைத்துச் சுணங்கிப் போட்டுது...'' என்று சாட்டுச் சொல்லி வருவான். காத்திருக்கிறேன்.

எனக்கு எங்கே தெரியப் போகிறது - அன்று மாலையில் நல்லூர் சட்டநாதர் கோயிலுக்கு அருகில் புலிகளின் கோர நகங்கள் குண்டுகளாகி அவன் உயிரைக் குடித்து விட்ட செய்தியை.

நன்றி - நூலகத்திட்டம்



# காகம் கலைத்த கனவு
## சில குறிப்புகள்........

சி. சிவசேகரம்.

ஈழத் தமிழ்க் கவிதைக்குக் கடந்த பத்தாண்டுகளில் நேர்ந்த பெரிய இழப்பு சிவரமணியின் மரணம் என்றால் அதே கால கட்டத்தில் அது அடைந்த ஒரு முக்கியமான பேறு சோலைக்கிளியின் பிரவேசம். இருவரும் இரண்டு வித்தியாசமானதும் ஈழத் தமிழ்க் கவிதை வழக்கிற்குப் புதியதுமான கவிதைப் போக்குகலள அடையாளம் காட்டினார்கள். முன்னவர் தனது கவிதைத்துவத்தின் உச்சத்தை நோக்கிய பயணத்தின் போதே தனது வாழ்க்கைப் பயணத்தை முடித்துக் கொண்டார். பின்னவர் புதிய புதிய உச்சங்களை நமக்குத் தொட்டுக் காட்டுகிறார்.

''காகம் கலைத்த கனவு '' தொகுதியாக வெளிவர முன்னரே சோலைக்கிளியின் '' தொப்பி சப்பாத்து சிசு '' கவிதையைப் பார்க்கும் வாய்ப்புக் கிடைத்தது. நான் முன்பு சம்பந்தப்பட்டிருந்த 'பனிமலர்' என்ற லண்டன் தமிழ்ப் பத்திரிகையின் சக ஆசிரியர் அதை மறுபிரசுரம் செய்த காரணத்தாலேயே, சோலைக்கிளி பற்றி அறியும் வாய்ப்பு எனக்குக் கிடைத்தது. அவரது முந்திய தொகுதி ஒன்று (எட்டாவது நரகம்) சென்ற வருடமே என் பார்வைக்குக் கிடைத்தது. எக் காரணத்தாலோ 'காகம் கலைத்த கனவு' என் கைக்கு வர ஒன்றரை வருடம் எடுத்தது. அதற்கிடையில், அவரது சில கவிதைகள் ஐரோப்பிய தமிழ்ச் சஞ்சிகைகளில் மறுபிரசுரமாயின. சோலைக்கிளியின் தொடக்ககால கவிதைகள் சில பற்றி முருகையனது விமர்சனக் குறிப்புகள் தொடர்பாக நுஃமான் 'எட்டாவது நரகம்' தொகுதியின் முன்னுரையிற் குறிப்பிட்டிருந்தார். அவரது முன்னுரையில் விமர்சனப்பாங்கான சில வார்த்தைகள் கூறப்பட்டிருந்தன. 'காகம் கலைத்த கனவு' பற்றி வ.ஐ.ச ஜெயபாலன் விமர்சிக்க மிகுந்த தயக்கத்துடன், எழுதிய நயப்பு ஒன்று கனடாவிலிருந்து வரும் 'தாயகம்' வார ஏட்டில் வந்ததாக நினைவு. வேறொருவரது விமர்சனக் குறிப்பொன்று ஒரு ஐரோப்பிய ஏட்டில் வந்ததாக நினைக்கின்றேன். சோலைக்கிளியின் கவிதைகள் தம் உருவமும் உள்ளடக்கமும் காரணமாகப் பலவேறு கோணங்களின்று விமர்சிக்கப்படக் கூடியன. எனினும், அவரது கவிதைத் தொகுதி மிகவுங் காலந்தாழ்த்தியே கைக்கு வந்தமையால், அது பற்றி எழுதும் எண்ணத்தைக் கைவிட்டிருந்தேன். அண்மையில் இலங்கையிலிருந்து நண்பர் ஒருவர் சோலைக்கிளியின் கவிதைகள் பற்றி எழுதுவது நல்லது என்று தெரிவித்திருந்தார். எனவே சமகாலத் தமிழ்க் கவிதை பற்றி அக்கறையுடையோர் மிகவும் அறிய வேண்டிய ஒரு கவிஞரின் படைப்புக்களைப் பற்றி எழுத முற்படுகிறேன்.

நுஃமான் 1988ம் ஆண்டு எழுதிய தனது முன்னுரையில் அவரது வெளிப்பாட்டு முறையும் அலாதியான புதுப் புதுப் படிமங்களையும் பற்றிக் குறிப்பிட்டிருந்தார். படிமங்களே கவிதைகளாகக் கருதப்பட்ட ஒரு சூழலினின்று புதுக் கவிதை விடுபட்டாலும், படிமங்கள் அதி புத்திசாலித்தனமான உணர்வு மரத்துப் போன ஒரு கவிதை மரபின் தூண்களாகிய நிலையைத் தமிழ் நாட்டின் புத்திஜீவிக் கவிதை வட்டம் உருவாக்கியது. இலங்கையின் தமிழ்க் கவிதையோ தன் நேரடியாகப் பேசும் தன்மை மட்டுமே போதுமானதாகக் கருதும் தவறுக்கு ஆளாயிற்று. தமிழ்த் தேசிய இன விடுதலைப் போராட்டச் சூழல் கவிதைகளின் உள்ளடக்கத்தில் ஒரு கனதியான தன்மையைச் சாத்தியமாக்கிற்று. ஆயினும் மரபுக் கவிதை பற்றியும் பொதுவாகவே கவிதை பற்றியும் போதிய அறிவின்மை காரணமாகப் புதுக்கவிதை என்பது எழுத்தாற்றல் இல்லாதவர்கள் ஒதுக்கிடம் தேடும் ஒரு அம்பலம் போலாயிற்று. புதுக்கவிதை என்றால் என்ன என்பது பற்றிய தீர்க்கமான விடையை எவரும் தருவது எளிதல்ல. புதுக்கவிதைகளை அமைப்பின் படி வகைப்படுத்துவதும் அதன் அழகியற் கூறுகளை வரிசைப்படுத்துவதும் மட்டுமே போதாவெனினும், தமிழிற் புதுக் கவிதைக்கு, எது அவசியம் என்று காட்டுவது பலருக்கும் எளிதாக இருந்தது. இவ்வகையிற் சிலரால் முற்றாகவே மறுக்கப்பட்ட, ஒரு அம்சம் ஓசைநயம் எனலாம். எதுகை, மோனை இல்லாமல் மரபின் சந்த வடிவம் ஒன்றில் அமைந்த கவிதை புதுக் கவிதையல்ல என்று நிராகரித்த ஒரு கட்டுரையைத் தமிழகச் சிற்றேடொன்றிற் பன்னிரண்டு ஆண்டுகள் முன்பு கண்ட நினைவு. ஓசைநயம் என்றால் ஒரு சீரான சந்தமே தான் என்ற அபிப்பிராயம் இன்னமும் உள்ளது. பேச்சோசையின் சந்தங்கள் பற்றிய உணர்வும் அறிவும் நம் மத்தியிற் போதாது. ஆயினும் அவற்றைக் கவிதையிற் பயன்படுத்த முடியும். சோலைக்கிளியின் கவிதையில் ஒரு விதமான சந்த ஒழுங்கைக் காணலாம் அது சீர்படுத்தப்பட்ட பேச்சு மொழியின் சந்தம். அது வரிக்கு வரி

தந்தன தந்தன தனதன தந்தோம்
என்ற விதமாகவோ

தக்கத் தரிகிட தா தக்கத் தரிகிட
தை

என்ற விதமாகவோ வரிக்கு வரி ஒரே விதமாக வராது. அவரது சொற்கள் இயல்பாகவே வந்து கவிதை வரிகளாக விழும் போது அவற்றிடையே உள்ளார்ந்த ஒரு சந்த உறவும் அமைந்து விடுகிறது. மரபுக் கவிதையிற் போல் 'தேமா, புளிமா' என்று அளக்கக் கூடிய விதமாக அது எப்போதும் அமையாது.

**நாம் சந்திக்கும் வேளைகளில்**
**உன் முகத்தில் சந்திரன் உதிக்க**
**வில்லை.**
**என் முகத்தில்**
**ரோஜா மலரவில்லை**
**அவ்வளவே**
**(ஓர் உறவு பூத்த பாட்டு)**

மூன்றாம் நான்காம் வரிகளைச் சேர்த்து வாசித்தால் இரண்டாவது வரியுடன் உள்ள ஓசை உடன்பாடு தெரியும்.

**நீயும் நானும்**
**அண்மையிற் தான் இருந்தோம்**
**நம் உறவுதான்**
**நான் முன்னர் சொன்னதைப்**
**போல்**
**பூமிக்கும் வானுக்கும்**
**இடைப்பட்ட தூரமாய்**
**நெருங்க முடியாமல் தினசரியும்**
**நீண்டது.**

அதே கவிதையில் வரும் இந்த அடிகளில், முன்னையளவு தெளிவான ஓசை ஒழுங்கு இல்லை. உரக்க வாசிக்கும் போது ஒரு ஒழுங்கான ஓட்டத்தை உணர முடிகிறது. வரிக்கு வரி வரும் அலைகளின் நீள வேறுபாடுகளை மீறிய ஒரு சந்த உணர்வை அனுபவிக்க முடிகிறது. அதை விறைப்பான அளவு கோல்களால் அடையாளம் காட்டுவது சிரமம்.

வலிந்து வார்த்தைகளைத் திணிக்கிற போக்குச் சோலைக்கிளியின் எழுத்திற்கு அந்நியமானது. நுஃமான் தன் முன்னுரையிற் கூறியது போல சோலைக்கிளியின் கவிதைகள் வாசகர்களிடம் உணர்திறனையும் கற்பனை வளத்தையும் வேண்டி நிற்கின்றன. அதி புத்திஜீவித்தனமான கவிதைகளை முடிச்சவிழ்க்கும் ஆற்றலைப் போலன்றி இவை கவிஞரது கவிதை மொழியுடனான பரிச்சியத்தின் மூலம் எளிதாக விருத்தி செய்யக் கூடியவை.

அவருடைய கவிதைகள் மிகவும் தன்னுணர்வு சார்ந்தவை. ஒரு புறம் அவரது தனிப்பட்ட அனுபவங்களதும் அந்தரங்க உணர்வுகளதும் வெளிப்பாடாகவும் மறுபுறம் தன்னைச் சூழவுள்ள சமுதாயத்தின் அதி வேகமான சீரழிவின் மீதான கோபத்தின் வெளிப்பாடாகவும் அவரது கவிதைகள் அமைகின்றன. இடையிடையே தன்மன உட்தேடல்களையும் காணலாம். ஆயினும் அவரது மொழியின் எளிமை கவிதை அனுபவமற்ற ஒரு வாசகரை ஏமாற்றி விடலாம். அவரது 'நான் பிள்ளை' என்ற கவிதையைப் பார்ப்போம்.

**திடீரென வானம் விழுந்தது.**
**நாலு தென்னைகளும் ஆறேழு**
**பனையும்**
**தலையாலே முறிந்து**
**தொங்கின**
**ஒரு கோழி வீறிட்டுக் கத்தியது.**

**எனது பிள்ளை விளையாடிக்**
**கொண்டிருந்தான்**
**வாசல் முழுக்க நட்சத்திரங்கள்**
**உடைந்து நொருங்கிக்**
**கிடந்தன**
**ஒரு முகிலை எடுத்து**
**அணைத்து முத்தமிட்டான்.**

**பின்னர் எழுந்து**
**அங்கே சிதறிக் கிடந்த நிலவின்**
**துண்டுகளை**
**ஒட்டிப் பார்த்தான். பிறகு**
**எறிந்தான்.**
**இன்னொரு நிலவைச் செய்ய**
**லாம் என்று**
**தனக்குள் சொல்லிக் கொண்டு**
**நடந்தான்.**

**நான் வீட்டுக்குள் இருந்தேன்**
**என் சின்ன வயதில் இந்த நில**
**விற்காய்**
**அழுத அழுகைகளை நினைத்**
**தேன்.**
**ஒரு நட்சத்திரம் கூட என்னால்**
**அந்த நாட்களில்**
**பிடித்துப் பார்க்க முடியாமல்**
**போயிற்று**
**வானம் என்னை விட வெகு**
**தொலைவில் இருந்தது.**

**என் தலைமுறைக்குள் இப்படி**
**யொரு மாறுதல்**
**மாங்காய்க்குக் கல்லை எறிவது**
**போல்**
**வானுக்கு எறிந்து**
**நிலத்திற் கிடக்கிற பிள்ளை!**


**இப்போது அவன் வானத்தை**
**மீண்டும் சரி செய்து விட்டு**
**நடக்கிறான்**

'தொப்பி சப்பாத்து சிசு', 'தொட்டில்' போன்று எதிர்கால சிறுவர்கள் பற்றிய அச்சங்களை வெளிப்படுத்திய கவிதைகள் இன்றைய சமுதாய நெருக்கடியும் யுத்தச் சூழலும் இளஞ்சிறார்கள் மீது ஏற்படுத்தும் பாதிப்புகள் பற்றியன. இன்றைய இளைஞர் பரம்பரைக்கும் அவர்களது முன்னோருக்குமிடையிலான வேறுபாட்டின் இன்னொரு அம்சம் பற்றியதே மேற்தரப்பட்டுள்ள கவிதை. இங்கு சமகால இளைஞர்களின் தன்னம்பிக்கையும் துணிவும் நேரடியாகவே அடையாளங் காணப்படுமாயினும், நுகர்வைப் பெருக்கும் இலக்குடன் குப்பைத் தொட்டிக்கான உற்பத்தியை அடிப்படையாகக் கொண்ட ஏக போக முதலாளித்துவத்தின் முக்கிய பாதிப்புக்களின் ஒன்றான விரயத்தையும் நாம் தரிசிக்க முடிகிறது.

சோலைக்கிளியின் பல கவிதைத் தலைப்புகள் (காகம் கலைத்த கனவு, இறகு உதிர்ந்த கிராமம், கொம்பன் காற்று, பேய் நெல்லுக்காய வைக்கும் வெய்யில் போன்று) பல வாசகரை உலுப்பிவிடும் தன்மையுடைய படிமங்களே. அவரது கவிதைகளில் படிமங்கள் செறிந்திருப்பது போல சமகால ஈழத்துத் தமிழ்க் கவிதைகளில் எங்குங் காண்பது அரிது. படிமங்கள் ஒவ்வொன்றும் அவரது எண்ணங்களைக் கீழ்க் கோடிட்டுக் காட்டுவன. 'முட்டையை விட்டு வெளியேறிய குஞ்சுகள் மாதிரி' மீண்டும் நகருக்கு வரும் மனிதர்கள் பற்றிய முதலடிகள் மேற் கொண்டு வரும் வரிகளுக்கு நம்மை ஆயத்தப்படுத்தி விடுகின்றன. இக் கவிதையில் மனிதனைப் பார்த்து ஏளனமாக மாடு சாணமிடுகிறது. மரமும் மண்ணும் காகங்களும் தமக்குள் சிரிக்கின்றன. 'கல் விழுந்த குளம் போல' காலை விடிவது ஒரு கலவரமிக்க நாளை அறிவிக்கிறது. இவ்வாறு, இவரது புதுமையான படிமங்களைப் பற்றி அடுக்கிக் கொண்டே போகலாம். ஆயினும் இவரது கவிதைகளின் சிறப்பு சொற்கள் மீதான இவரது அற்புதமான ஆளுமையை விட மேலாக, இவரது இளகிய மனதின் மீதும் அதன் மனித நேயத்தின் மீதும்தான் தங்கியுள்ளது. கல்லிறைத்து உருளை நெரித்த தெருவில் தலை நிமிர்த்தும் புல்லையும் புத்தகத்தை மூடுகையில் நசுங்குண்ட புள்ளி அளவிலான பூச்சியையும் நினைத்து உருகிய மகாகவியின் மனித நேயத்தை, ஏனோ சோலைக்கிளி என் மனதுக்குக் கொண்டு வருகிறார்.

சோலைக்கிளி மற்ற எந்த ஈழத்துத் தமிழ்க் கவிஞரையும் விட அதிகமாக விலங்குகளுடனும் இயற்கையின் வெவ்வேறு கூறுகளுடனும் உறவாடுகிறார். அவற்றுடன் உரையாடி அவற்றின் மூலம் தன் உணர்வுகளை வெளிப்படுத்தும்

→ 11



காகம் கலைத்த கனவு
சோலைக்கிளி
சுவடுகளுக்காக
'பொன்னி'
25, அருணாசலம் பிரதான சாலை,
அடையாறு,
சென்னை-20

நன்றி - நூலகத்திட்டம்



## அருணா தயாரா?

கடந்த யூன் 4ம் திகதியன்று வெளிவந்த சரிநிகர் ஏட்டின்பால் உங்கள் கவனத்தை ஈர்க்கின்றேன். இவ்விதழில் பிரேமதாஸா கண்ணியமானவர், கருணையுள்ளம் படைத்தவர் என்ற கட்டுரையைத் திரு அருணா பரமேஸ்வரன் எழுதியுள்ளார். இதிலுள்ள நகைச்சுவைத் தமிழை விமர்சிக்காமல் விசயத்துக்கு வருகின்றேன்! ''யாழ்ப்பாணத்தில் புலிகளினால் ''ஈழநாதம்'' என்ற தமிழ்த்தினசரி தொடங்கப்பட்டது. அதில் அடிக்கடி பிரேமதாச புகழப்பட்டார் என எழுதப்பட்டுள்ளது. இது பொய்... பொய்... பொய் முழுப்பொய். யாழ்ப்பாணத்தில் இருந்து வெளிவரும் 4 தினசரிகளையும் ஒழுங்காகப் பார்த்தவன் நான். அதனால்தான் சொல்கிறேன். பிரேமதாசவுக்கு அவர்கள் ஒருபோதுமே புகழாரம் தமது பத்திரிகையில் சூட்டியது இல்லை. வானத்தில் இருந்து குண்டும், தரையிலிருந்து ஷெல்லும் தமிழ் மக்களுக்கு ஏவிய தார்மீக அரசுக்கு ''ஈழநாதம்'' ஆசிரியர் தலையங்கத்தில் பாராட்டுரை வழங்கப்படவே இல்லை. இருளில் இருந்து பார்ப்பவர்க்கு ஒளியில் இருப்பவர்களைத் தெரியும். ஒளியில் இருந்து பார்ப்பவர்க்கு இருளில் இருப்போரைத் தெரிய நியாயம் இல்லை. எவரையும் விமர்சிக்கும் உரிமை அருணா பரமேஸ்வரனுக்கு உண்டு. ஆனால் ஆதாரம் இன்றி எழுதப்படும் கட்டுரையும் ஒளியில் இருந்து இருளைப் பார்த்த கதையாகவே முடியும். சரிநிகர் பத்திரிகையில் (கால எல்லை இல்லை) ஈழநாதம் பிரேமாவைப் பாராட்டிய செய்திகளை (ஆசிரியர் தலையங்கத்தில்) போட்டோஸ்ரப் பிரதிகளுடன் வெளியிடுமாயின் அருணாவுக்கு பரிசாக ரூபா 500 அளிக்கின்றேன் , காசோலையில் அல்ல பண்மாகவே அளிக்கின்றேன். அருணா பரமேஸ்வரன் தயாரா?

சி. இந்திரஜித்து
மட்டக்களப்பு

## வாசகர் செ(ா)வ்வடி



## இனப்பிரச்சினை அல்ல பயங்கரவாதமே

ஜனாதிபதி கொல்லப்பட்டு விட்டார். நாடு சோக கீதம் இசைத்துக் கொண்டிருக்கின்றது. புலிகள்தான் கொலை செய்தார்கள் என்று புலனாய்வு அதிகாரிகள் பிரகடனப்படுத்திவிட்டார்கள். தமிழர்கள் தலைநகரை விட்டு இடம்பெயர்ந்துள்ளார்கள். ஜனாதிபதியின் பூதவுடலுக்கு மக்கள் அஞ்சலி செலுத்திக் கொண்டிருக்கின்றார்கள்.

இந்த இக்கட்டான சூழலில் பதவிப் பொறுப்பை ஏற்றிருக்கும் புதிய ஜனாதிபதி புலிகள் பற்றி ,பீ.பீ.சிக்கு கருத்து தெரிவிக்கையில் '' பேச்சு நடத்த விருப்பம்'' என்று சொன்னபோது இவருடைய தைரியத்தையும் துணிவையும் கண்டு வியந்தோம்.

ஆனால் அடுத்த மூன்று நாட்களுள் வெளிநாட்டு பத்திரிகைகளுக்கு அளித்த பேட்டியில் இலங்கையில் ''இனப்பிரச்சினை இல்லை பயங்கரவாத பிரச்சினையே உள்ளது'' என்று பல்டி அடித்த போது இருந்த அற்ப சொற்ப நம்பிக்கையும் போய்விட்டது. இந்த மனுஷனும் இனப்பிரச்சினையை தன்னுடைய காலத்தில் இழுத்தடிக்கப் போகின்றார் என்பது தெளிவாகின்றது.

தெரிவுக்குழுவை நினைத்தாலே வாந்தி வரும். இந்த லட்சணத்தில் தெரிவுக்குழுக்களுள் தமிழர்களை இழுக்க மீண்டும் முயற்சியாம். கிழக்கின் தமிழ்பகுதிகளை வடக்குடன் இணைக்கப்போகிறார்களாம். இதெப்படி சாத்தியமாகும்? கிழக்கின் கேத்திரப்பகுதிகளின் சிங்களவர்களை திட்டமிட்டு குடியேற்றி விட்டு இப்போது எதை இணைக்கப்போகின்றார்கள்? இது கிழக்கிலிருந்து தமிழர்களை முற்றாக விரட்டும் முயற்சியா?

எம். ஆனந்தன்
தெகிவளை.

## இணையத் தயார்; இஸ்லாமியத் தமிழராக அல்ல

அடிக்கடி எமது கருத்துக்களை பகிர்ந்து கொள்ளாவிடினும், உங்களது (சரிநிகரது) பெரும்பாலான கருத்துக்களில் எமக்கு அபிப்பிராய பேதமில்லை.

கருத்துக்களில் தெளிவு, அவற்றை தைரியமாக முன்வைக்கும் துணிவு, நடுநிலை தவறாத நடை, வித்தியாசமான அம்சங்களுடன் கூடிய கவர்ச்சியும், தனித்துவமான நடையழகும்..... இவற்றையெல்லாம் மாதாந்தம் தரிசிக்கின்ற போது, ''அட, நம்ம சரிநிகர்'' எனும் உணர்வலைகளைத் தவிர்க்க முடியவில்லை. கடந்த டிசம்பர்-26ம் திகதியின் பாஸிஸப் படுகொலையின் பின், சரிநிகர், எமது கண்ணீரோடு கைகோர்க்க முன் வந்தது ஒரு குறிப்பிடத்தக்க விடயம். எமது பிரதேசம் இதனை எண்ணி, இன்றும் பெருமைப்பட்டுக்கொள்கிறது. எமது பெருமதிப்புக்குரிய ஆசான் வை. அஹ்மத் எனும் மானுட நேயனின், புத்திஜீவியின் மரண அனுதாபத்தில் மகுடம் சூட்டியது சரிநிகர்.

மேலும், முஸ்லீம்களின் ஜீவாதார உரிமைப்பிரச்சனைகளின் போது மனிதாபிமானத்தோடு அணுகுவதும்... தமிழ் மக்களின் உரிமைப் போராட்டத்தை முன்னெடுத்து போர்க்கொடி தூக்கும் சரிநிகரின் போக்கும்... (இதழ்-23ன் ஆசிரியர் கருத்து) நிஜமாகவே மெச்சத்தக்கவை. மானுடநீதியும், மனச்சாட்சிபடைத்தவர்களும் இன்னும் இருக்கின்றார்கள் என்பதற்கு இதுவே மிகச் சிறந்த அத்தாட்சி.

என்றைக்குமே நாம் எமது தமிழ் சோதரர்களின் வேதனைகளை அனுதாபத்தோடு நோக்குவோம். போக்கப்படவேண்டும் எனவும் எண்ணுகின்றோம்.

'தமிழ் பேசும் மக்கள்' எனும் உள்ளடங்களுள் நாமும் நிஜமாகவே இணையத் தயார். ஆனால், ( இஸ்லாமியத் ) தமிழர்களாக அல்ல!

தமிழ் மக்களுடைய நியாயபூர்வமான உரிமைகள், மீளளிக்கப்பட வேண்டும். தமிழர்களுடைய உரிமை முழக்கம், முஸ்லிம்களின் உரிமை முழக்கமாகும். தமிழ் மக்கள் உரிமைகள் வெல்வது, முஸ்லீம்கள் உரிமை வென்றதாகும். இது ஒன்றுடன் ஒன்று பின்னிப் பிணைந்த இரு வேறு கூறுகள்!

இனப் பிரச்சினையும் பயங்கரவாதமும் ஒன்றென அரசு குழப்புகிறது. வடகிழக்குப் பிரதேசத்தில் வதியும் தமிழ் பேசும் மக்களுக்கு சுயாட்சி வழங்கப்பட்டு இனப்பிரச்சினை தீர்க்கப்பட வேண்டும். ஆனால், பயங்கரவாதம் முழு நாட்டிற்கும் அச்சுறுத்தலாகும். அது ஒழிக்கப்பட வேண்டும். இது ஏனைய இனத்தவர்களுக்கு முக்கியம்.

எனவேதான்,இனப்பிரச்சினை நீதியாகத் தீர்க்கப்பட வேண்டும். ஆனால் பயங்கர வாதம் முற்றாகத் துடைத்தெறியப்பட வேண்டும். இங்குதான் தமிழ் மக்களிடமிருந்து புலிகள் அந்நியப்படுகிறார்கள். எந்த போராட்டத் தமிழ்க் குழுவும் எங்களை நியாயமாக நடத்தியவர்களல்ல. ( இப்போது ஜனநாயக நீரோட்டத்தில் சேர்ந்துள்ளதாக சொல்பவர்கள் உட்பட ) எல்லோருமே முஸ்லீம்களின் இரத்தத்தில் நீச்சலடித்தவர்கள்தான். இவற்றைக் கௌரவமாக ஏற்றுக்கொள்ள தார்மீக பலமும் அவர்களிடம் கிடையாது. எனவே தான் முஸ்லீம்களுக்கு உதவுவதற்கும் எவ்வித உரிமையும், மனோதிடமும், மானுட தர்மமும் இவர்களுக்கு இல்லை.

(யாழ்ப்பாண முஸ்லீம்களின் நன்மை கருதியே அவர்களை அங்கிருந்து வெளியேற்றி விட்டதாக; தன்னைப் போலவே எல்லோரும் இருப்பார்கள் என்று நினைத்துக் கொண்டு பி.பி.ஸிக்கு பேட்டியளித்த தளபதி பிரபாகரனின் புளுகும் இங்கு கவனிக்கத்தக்கது.)

புலிகளின் கருத்துப்படி, வடகிழக்குத் தாயகத்தில் தமிழர்கள் மட்டும் தான் வசிக்க வேண்டும், ஏனைய இனத்தவர்கள் வெளியேற்றப்பட வேண்டும் என்றால், வடகிழக்குத் தவிர்ந்த ஏனைய மாகாணங்களில் மற்ற இனத்தவர்கள் மட்டுவே வாழ முடியும்; தமிழர்கள் வாழ முடியாது என்பதுதானே நியாயம். தீர்க்க தரிசனமற்ற, ஆயுதம் மட்டுமே தூக்கத் தெரிந்த ஒரு பாஸிஸக் கும்பலிடம், அறிவார்ந்த தமிழ் சமூகத்தின் நலன்கள் எதிர்காலத்தில் பலியிடப்படவுள்ளதே என்று நாம் அனுதாபங்கொள்கின்றோம். எங்கள் முதுகிலே ஆரம்பத்தில் சவாரி செய்து. இப்போது எங்களையே மிதிக்கின்ற இவர்களை- இனியும் நாம் நம்ப முடியாது. தமிழ்,முஸ்லீம் மக்களின் உறவுப் பாலத்தை உடைத்தெறிந்த முழுப் பொறுப்பும் இத் தமிழ் குழுக்களுக்கே உரியது.

இவற்றை எப்படி மறப்பது? மன்னிப்பது? முஸ்லீம் சமூகம், இக் கொடூரமான யதார்த்தங்களை சில சமயம் மன்னிக்கலாம், ஆனால், மறக்காது! இன்று கிழக்கு மாகாணத்தில், கடலில் கரைத்த உப்பைப் போல, நிலத் தொடர்பற்று வாழும் முஸ்லீம்கள்... வாரத்தில் நான்கு நாட்களும் வீட்டுச்சிறையில் வைக்கப்பட்டவர்களாய் விவசாயம், கடற்றொழில் வளங்களைப் பறிகொடுத்து, ஊருக்குள்ளே உலவுகிற முஸ்லீம்கள்... ஏனைய மூன்று நாட்களிலும் நிச்சயமற்ற ''பிரிகேடிங்''கில் பிரயாணப்படுகின்ற முஸ்லீம்கள்... இவர்களின் எண்ணப் போக்கே இப்படித்தான் இருக்கின்றது.

எமது பிரதேசத்தில் சீரழிக்கப்பட்ட மனித விழுமியங்ளை ஒழுங்கமைத்து, தமிழ் பேசும் ஈரினங்ளையும் உணர்வூட்ட வேண்டியது உங்களது தார்மீக பணியாகும். இதுவரை, அதனை நீங்கள் செவ்வனே நிறைவேற்றி வந்துள்ளீர்கள். மேலும், இவ்விலட்சியங்களுடனும், கருத்துச் சுதந்திரத்தை நிலைநாட்டப் போராடும் உங்களுக்கு எமது தோழமையான ஒத்துழைப்பு என்றென்றும் உண்டு.

ஏ.ஜீ.எம். ஸதாக்கா
இக்பால் சனசமூக நிலையம்
சார்பாக

## நீதிதான் செத்ததா...

ளுக்கான பணத் தேவைகளுக்கும் கத்தோலிக்க மத நிறுவனங்களையே நம்பியிருந்தது. இயக்க்ம் தொடர்பான பல வேலைகளிலும் அரசியல் உணர்வு அதிகம் இல்லாத மத நிறுவனங்களினூடாக வந்தவர்களே ஈடுபடுத்தப்பட்டனர்.

இந்நிலைமைகள் இயக்கம் ஒரு அரசியல் இயக்கமாக எழுச்சி பெறுவதைத் தடை செய்திருந்தது.

இவ்வாறான குறைபாடுகள் இருந்த போதும் தேசிய விடுதலைப் போராட்ட வரலாற்றில் புதிய சிந்தனையை தொடக்கி வைத்தது என்ற வகையில் இதற்கும் ஒரு தனியிடம் உண்டு எனக் கூறலாம்.●

## காகம் கலைத்த....

சோலைக்கிளியின் கவிதைகளில் மனித இருப்புப் பற்றிய கரிசனை மிகுதியாக உள்ளது. அவரது தொடக்க காலக் கவிதையின் காதல் ஏக்கங்களும் பின்னைய காலத்திற் தனக்கு இழைக்கப்பட்ட தவறுகள் பற்றிய மனஉழைச்சலுங் கூட, மற்றவர்களும் எளிதாகப் பகிரக் கூடிய பாங்கில் அமைந்துள்ளன. ஆயினும், 'திருஷ்டி பட்டு விடுமோ என்று, 'ஒரு கவிஞனைப் போன்று திரிகிற அற்பனுக்கு' என்று தன் தரத்துக்கு ஒவ்வாத ஒரு தனிப்பட்ட தாக்குதலையும் இத் தொகுதியில் உள்ளடக்கி விட்டார்.

முஸ்லீம்கள் ஆயிரக்கணக்கில் அநியாயமாகப் பலியாகிற சூழல்களையும் தமிழ்-முஸ்லீம் கலவரங்களையும், மனித அவலத்தை அதிகப்படுத்தும் போர்ச் சூழலையும் பற்றிய பல கவிதைகள் நிறைந்த இந்தத் தொகுப்பில் எந்தவொரு இடத்திலும் இனத்துவேஷமான சொற்களோ மதத் துவேஷத்தின் சாடையோ இல்லாமை மிகவும் கவனிக்கத்தக்க ஒன்று. சோலைக்கிளியின் கோபம் மனிதர்கள் மீதல்ல. அவர்களை கொடிய மிருகங்களாக்கும் ஒரு சூழல் மீதானது. பரணி பாடுகிற பம்மாத்துக் கவிராயர்கள் சோலைக்கிளியிடமிருந்து கற்க வேண்டிய பண்பு மனித நேயம் .

கடந்த சில மாதங்களில், சோலைக்கிளியின் அண்மைய கவிதைகள் (காகம் கலைத்த கனவிற்குப் பிற்பட்டவை) ஓரிரண்டைக் கண்டேன். அவரது கவிதைகளின் சமுதாய உணர்வு கடந்த சில ஆண்டுகளில் மிகவும் வளர்ந்துள்ளது. இது, நுஃமான் அவரிடம் கேட்டுக் கொண்டது போல, மேலும் விரிவடைய வேண்டும் என்பது என் ஆவல்.

## உலக பொருளாதார.....

'' உள்நாட்டு சந்தையுடன் போட்டி போடுவதற்குரிய வகையில் இறக்குமதிக் கொள்கை இருந்ததால் உலகவங்கி பிலிப்பைன்ஸை பாராட்டுகிறது. உலகவங்கியின் உத்தரவுப்படி அல்லது அவர்கள் கேட்டுக் கொண்டபடி நாம் இறக்குமதியின் மீதான சுங்கத் தீர்வையை குறைத்தோம். அவர்கள் கேட்டதை நாம் செய்யும் போது பாராட்டத்தானே செய்வார்கள். நாம் கீழ்ப்படிந்து நடக்கும் வரை நமக்கு புகழுரைகள் நிச்சயம் கிடைக்கும்''

டியா.டோரா.எப்-வலன்சியா
(பிலிப்பைன்ஸ் பத்திரிகை ஆசிரியர்)

## கட்சிகளும்... வட-கிழக்கு..

எனினும் ஈ.பி.ஆர்.எல்.எப் கருத்துக் கணிப்பு இல்லாமல் கிழக்கிலுள்ள தமிழ்ப் பகுதிகளை மட்டும் வடக்குடன் இணைக்கும் யோசனையை முன் வைத்துள்ளது. இவ் யோசனையை இவர்களுடைய முன்னைய ஆசான் தயான் ஜயதிலக ஏற்கனவே முன்வைத்திருந்தார்.

வரை, இலங்கை அரசாங்கத்துடன் இவற்றிற்காகப் போராடாதவரை, இன்னமும் வெளவால்களில் நம்பிக்கை வைத்திருக்கும் வரை இவர்களால் நாம் முன் சொன்னது போல அவமானப்படுவதை தவிர வேறெதையும் செய்ய முடியாது.


நன்றி - நூலகத்திட்டம்

REGISTERED AS A NEWS PAPER IN SRI LANKA

சரிநிகர்

# விவேகானந்தா சபை முகாம் அகதிகள்

# ஓட ஓட விரட்டுகிறார்கள். —— முடிவெப்போது?



ஜூன் மாதம் 30ம் திகதி அதிகாலை கொழும்பு விவேகானந்தா அகதிகள் முகாமில் இருந்த அகதிகள்' பலவந்தமாக பஸ்களில் ஏற்றப்பட்டு மட்டக்களப்புக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளனர். பஸ்ஸில் ஏற மறுத்தவர்களைப் பொலிஸார் தாக்கியுள்ளதாகத் தெரியவருகிறது.

கிழக்கு மாகாணத்திற்கு திருப்பி அனுப்பப்படும் இந்த அகதிகளுக்கு எந்த விதமான ஒழுங்குகளும் செய்யப்படவில்லை. இரண்டே இரண்டு ஓலைக் கொட்டில்கள் கட்டப்பட்டு ஒரு அகதி முகாம் அமைக்கப்பட்டுள்ளது. இந்த இரு கொட்டில்களிலும் ஆகக் கூடியது 47 குடும்பங்கள் மட்டுமே இருக்கலாம் அப்படியெனில் மிகுதி 62 குடும்பங்களினதும் நிலை என்ன?

ஜூன் மாதம் 9ம் திகதி விவேகானந்த சபை அகதி முகாம் பொறுப்பாளரால் எதுவிதமான முன்னறிவித்தலும் இன்றி திடீரென ஒரு அறிவித்தல் விடப்பட்டது. ''உங்களை உங்கள் சொந்த இடங்களுக்கு திருப்பி அனுப்ப அரசு தீர்மானித்துள்ளது. நீங்கள் எல்லோரும் 16ம் திகதி காலையில் செல்வதற்குத் தயாராக இருக்க வேண்டும். உங்களை மீளக் குடியமர்த்துவதற்காகவே இந்நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. ஆனால் இது தொடர்பான எந்த நிவாரணமும் உங்களுக்கு வழங்கப்பட மாட்டாது. நீங்கள் எந்தவிதமான ஆவணங்களையும் காட்டி 'போகமுடியாது' என்று மறுக்க முடியாது. இது தொடர்பாக சமூக சேவைகள் திணைக்களத்துடனோ அல்லது வேறுயாருடனுமோ தொடர்பு கொள்ளக் கூடாது. இங்குள்ள பாடசாலைகளில் பிள்ளைகளைப் படிப்பிப்பவர்கள் உங்கள் பிள்ளைகளது சேட்டிபிக்கேற்றை முன் கூட்டியே எடுத்து ஆயத்தமாக இருங்கள்.''

அகதிகளால் எதுவும் செய்ய முடியவில்லை.

ஜூன் 15ம் திகதி உண்ணாவிரதமிருக்க ஆரம்பித்தார்கள். தமிழ்க் கட்சிகள் சில இவர்களைத் திருப்பியனுப்ப வேண்டாமெனக் கூறின.

உண்ணாவிரதத்தைக் கைவிடுமாறும் உங்களது விடயத்தைப் பரிசீலிக்கிறோம் என்றும் அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

உண்ணாவிரதத்தைக் கைவிட்டார்கள்.

ஆனால் அரசு நிவாரணத்தை நிறுத்தியது.

83ம் ஆண்டிலிருந்து மட்டக்களப்பில் அகதிகளாக வாழ்ந்தவர்கள். 90இல் யுத்தம் மீள ஆரம்பித்ததும் அங்கிருந்தும் அகதிகளாக கொழும்பை நோக்கி ஓடி வந்தார்கள் உயிரைக் கையில் பிடித்துக் கொண்டு. இப்போது நிலைமை அப்படியே இருக்கத் திரும்பிப்போ என்கிறது அரசு.

கொழும்பிலிருந்து பலாத்காரமாக இவர்கள் அனுப்பப்படுவதற்கு சில நாட்களுக்கு முதல் சரிநிகர் அவர்களைச் சந்தித்த போது.

''85ம் ஆண்டு அகதிகளாக இருந்த போது நாலாயிரம் ரூபாவிற்குப் பெறுமதியான நிவாரண அட்டை தந்தார்கள். அந்த அட்டைக்கான எந்த நிவாரணமும் இதுவரை வழங்கப்படவில்லை. அது வெறும் அட்டையாகவே இதுவரை இருக்கிறது'' என்றார் அகதிகளில் ஒருவர்.

''எமது வீட்டுக்கருகில் இராணுவம் முகாமிட்டிருக்கையில் நாம் எப்படி அங்கே செல்ல முடியும்'' என்கிறார் ஏறாவூரைச் சேர்ந்த நான்கு பிள்ளைகளின் தாயார் ஒருவர்.

''எமது கிராமத்தில் இருந்து 170 பேரை படையினர் அழைத்துச் சென்றனர். இதுவரை அவர்கள் பற்றிய ஒரு தகவலும் இல்லை. தப்பியது எங்களது ஒரு குடும்பம் மட்டும்தான். இந்த நிலையில் ஏன் பலாத்காரமாக எங்களை அனுப்புகிறார்கள் என்று புரியவில்லை'' என்றார் ஓய்வு பெற்ற அதிபர் ஒருவரது மனைவி.

''கொப்பேகடுவ கொல்லப்பட்ட நேரத்தில் நிவாரணம் தருவதற்கு ஒரு இடத்தில் கூடும்படி படையினர் கூறினார்கள். நாங்கள் எங்களது நிவாரண அட்டைக்கு நிவாரணப் பொருட்கள் தரப்போவதாக நம்பிக் கூடினோம். அவ்விடத்திற்கு வந்த படையினர் சுட்டும் வெட்டியும் கொன்றார்கள். குழந்தைகள் பெண்கள் உட்பட நாற்பது பேர் இச் சம்பவத்தில் படுகொலை செய்யப்பட்டனர். சண்டை இன்னமும் நிற்கவில்லை. எங்களை எப்படிப் போய் இருக்கச் சொல்கிறார்களோ புரியவில்லை.'' என்கிறார் புனானையைச் சேர்ந்த இளம் பெண் ஒருவர்.

கிழக்கின் நிலைமை மாறவில்லை. படையினர் விரும்பியவாறு கைது செய்கிறார்கள், தாக்குகிறார்கள். பல கிராமங்களில் மக்கள் குடியிருப்புகளே இல்லை. வெறிச்சோடியிருக்கிறது. பதிலுக்கு இராணுவ பொலிஸ் காவலரண்களும், முகாம்களும்தான் இருக்கிறது. இந்த நிலையில் எப்படிக் குடியேறுவது? இது அவர்களது கேள்வி.

ஆனால் அரசு பலவந்தமாக ஜூன் 30ம் திகதி காலை பஸ்களில் ஏற்றி அனுப்பியிருக்கிறது. ஏறமறுத்தவர்கள் தாக்கப்பட்டிருக்கிறார்கள். ஏற்றி அனுப்பப்பட்டிருக்கிறார்கள்.

கிழக்கில் கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பை நடாத்துவதற்கு அரசு ஆலோசித்தது. கிழக்கு மாகாண மக்களை சொந்த இடத்தில் குடியேற்றாமல் வாக்கெடுப்பை நடாத்த முடியாது என்கிற அரசின் யோசனைக்கேற்பவே இவர்கள் பலவந்தமாக அனுப்பப்பட்டதாகக் கருதப்படுகிறது.

இரண்டாவது; தலைநகரில் அகதி முகாம்கள் இருப்பது, அரசிற்கு பல்வேறு நெருக்கடிகளைக் கொடுத்து வருவது.

மூன்றாவதும் முக்கியமானதும், அகதிகள் இருக்கும் கட்டிடம் விவேகானந்த சபைக்குச் சொந்தமானது. விவேகானந்த சபை இக் கட்டிடத்தில் அகதிகள் இருப்பதை விரும்பாததால் அவர்களை வெளியேற்றும்படி கோரியது.

ஆக, அந்த மக்கள் ஆடு மாடுகளைப் போல் ஏற்றி அனுப்பப்பட்டிருக்கிறார்கள். அங்கு போடப்பட்ட கொட்டில்களில் அடைக்கப்படுவார்கள். அவர்களுடைய ஓலம் வெளியுலகிற்குக் கேட்கா வண்ணம்.

இறுதியாக ஒன்று சொல்லலாம். ''எனது நாட்டில் ஒரு நாய் உணவில்லாமல் இருந்தாலும் அதற்கு உணவிடுவதே எனது மதமாகும்'' என்ற விவேகானந்தர் எங்கே? அந்த விவேகானந்தரின் பெயரால் உள்ள கட்டிடத்தில் இருந்த அகதிகளை நாயிலும் கேவலமாக ஓட ஓட விரட்டி அரசுக்குத் துணை புரிந்த விவேகானந்த சபை எங்கே?

—— கருணா

## சுதந்திர இலக்கிய விழா

இவ்விழா ஜனவரி 1991 இற்கும் டிசம்பர் 1992 இற்குமிடைப்பட்ட காலப்பகுதியில் வெளிவந்த நாவல், சிறுகதை, கவிதைகள், மொழிபெயர்ப்பு இலக்கியம் ஆகிய துறைகளில், குறிப்பிட்ட எழுத்தாளரின் பெயரினைத் தாங்கி அச்சில் வெளிவந்த தொகுப்பில் சிறந்த படைப்புகளுக்கான விருது வழங்கல்.

இளம் எழுத்தாளர்களுக்கான சிறுகதை கவிதை, பாடல் ஆகிய துறைகளில் போட்டி ஒன்றை நடத்தி பரிசு வழங்கல்.

முதலாவது **விருது வழங்கல்** நிகழ்ச்சிக்கு ஜனவரி 1991 தொடக்கம் டிசம்பர் 1992 வரையான காலப்பகுதியில் மேற்படி துறைகளில் அச்சில் வெளியான புத்தகங்களை மேற்படி குழுவே சேகரித்து விருது வழங்கும். ஆனால் படைப்பாளிகள் தமது புத்தகம் தொடர்பான விபரங்களை அனுப்பி வைத்தல் நன்று.

இரண்டாவது இளம் எழுத்தாளருக்கான போட்டி. எழுத்தாளர்களே கையெழுத்துப் பிரதியிலோ, அச்சில் வெளிவந்தவற்றிலோ அனுப்பி வைக்கவேண்டும். பின்வரும் நிபந்தனைகள் இளம் எழுத்தாளருக்குப் போதுமானது.

1) இலங்கை பிரஜை. (வெளிநாட்டில் வதிவோரும் பங்கு பற்றலாம்)
2) வயதெல்லை இல்லை.
3) எத்தனை படைப்புகளும் அனுப்பலாம்.

தனித்தனியான விண்ணப்பப்படிவம் இணைக்கப்படல் வேண்டும். படைப்புகள் தாளில் ஒரு பக்கத்தில் மாத்திரம் எழுதப்படல் வேண்டும்.

4) படைப்புகள் பத்திரிகைகள், சஞ்சிகைகளில் வெளி வந்திருக்கலாம். புதிய படைப்பாகவும் அமையலாம். ஆனால் நூலாக வெளிவந்திருந்தால் அவை ஏற்றுக் கொள்ளப்படமாட்டாது.
5) சொந்தப் படைப்பாக அமைதல் வேண்டும்.
6) கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் போட்டியிடும் துறை தெளிவாக குறிப்பிடப்பட வேண்டும்.
7) 1993 செம்ரெம்பர் 10ம் திகதிக்கு முன்னர் கிடைக்கக் கூடியதாக அனுப்பி வைத்தல் வேண்டும்.
8) நடுவர்களின் தீர்ப்பே இறுதியானது.

மேலும் விபரங்களுக்கும் விண்ணப்பப்படிவத்திற்கும் பின்வரும் முகவரியுடன் தொடர் கொள்ளவும்.

61,OLD COTTAWA ROAD,
MEERIGAMA
NUGEGODA.

சரிநிகர் மாத இதழ் இல. 18/2 அலோசாலை, கொழும்பு 03, இலங்கையருக்கிடையே நீதிக்கும் சமத்துவத்திற்குமான இயக்கத்தின் சார்பில்
[illegible] :334, காலி வீதி, [illegible] அச்சகம்.